விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 23 திங்கட்கிழமை (09.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

## தென்னை சரிந்து வீழ்ந்ததில் ஒரு வயதுப் பாலகி உயிரிழப்பு



### கிளிநொச்சியில் பரிதாபம்

(முறிகண்டி)

கிளிநொச்சி - கந்தபுரம் பகுதியில் தென்னைமரம் சரிந்து விழுந்ததில் பச்சிளம் பாலகி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன் குழந்தையை வைத்திருந்த குழந்தையின் அம்மம்மா படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலை ▶23

## யாழ்.பல்கலைக்குள் அதிரடிப்படையினர் அத்துமீறி நுழைந்ததால் பதற்றம்

### இரு மாணவர்களை துரத்தி வந்ததாக பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறப்பு அதிரடிப் படையினர். பொலிஸார் மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்ற இருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

எனினும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் புகுந்த சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளனர்.

பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்த சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸாரும் மாணவர்களை அச்சுறுத்திய செயற்பாடு நடந்த போதும் பல்கலைக்கழக நிர்வாகம் வேடிக்கை ▶23

## "கடத்தப்பட்ட சுவிஸ் தூதரகப் பெண்"

# சி.ஐ.டி யில் ஆஜராகி வாக்குமூலம் பதிவு

(கொழும்பு)

**கொழும்பில் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்ட சுவிஸ் தூதரகத்தின் பெண் பணியாளர் குற்ற விசாரணைப் பிரிவில் நேற்று மாலை முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.**

பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் பெண் பணியாளரை இன்று திங்கட்கிழமைக்கு முன்னர் குற்ற விசாரணைப் பிரிவில் வாக்குமூலம் வழங்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தது.

அத்துடன் இன்று அவர் நாட்டைவிட்டு வெளியேறவும் நீதிமன்றம் பயணத்தடை விதித்திருந்தது. இந்த நிலையில் கொழும்பில் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட சுவிஸ் தூதரகத்தின் பெண் பணியாளர் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் தனது சட்டத்தரணியுடன் சென்று நேற்று மாலை குற்ற விசாரணைத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். (ஞா)

## இராஜாங்க அமைச்சின் செயலாளராக
### கிளிநொச்சி அரச அதிபர் நியமனம்



▶23

## வடக்கு – கிழக்கில் இன்றும் நாளையும் மழை அதிகரிக்கும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மற்றும் ஊவா மாகாணங்களில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை இன்றும் நாளையும் மேலும் தீவிரமடையும் என வளிமண் டலவியல் திணைக்களம் எச் சரித்துள்ளது. வளிமண்டல வியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மற ▶23

## விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்தில் கிளிநொச்சி. பாரதிபுரத்தைச் சேர்ந்த ஏழுமலை விஜயராஜா (வயது 31) என்ற குடும் பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி வேலை நிமித்தம் யாழ்ப்பாணத்துக்கு கப் வாகனத்தில் வந்து இரவுவேளை திரும்பிப் போகும் போது பூநகரி செல்வியா தீவுப் பகுதியில் குறித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதியது.

இதில் வாகன சாரதியும் குறித்த நபரும் படுகாயமடைந்த நிலையில் பூநகரி வைத்திய ▶23

## அமைச்சர்களால் வழங்கப்பட்ட நியமனங்களை உடனடியாக இரத்து செய்ய வேண்டும்

### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு

(கொழும்பு)



அரச சபைகள், கூட்டுத்தாபனங்கள் போன்ற நிறுவனங்களின் உயர் பதவிகளுக்கு தகுதியானவர்களை அடையாளம் காண நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழுவின் தீர்மானங்களை மீறி, அரச நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமித்த சில அமைச்சர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடுமையாக சாடியுள்ளதுடன் அந்த நியமனங்களை உடனடியாக இரத்து செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார். ▶23

### சாவகச்சேரி வைத்தியசாலையில்
## போதையில் அட்டகாசம் செய்த இருவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில் மதுபோதையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் சொத்துக்களை சேதப்படுத்தியதுடன், பாதுகாப்பு உத்தியோகத்தர் மீதும் தாக்குதல் மேற்கொண்ட இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது. ▶23

## அரச ஊழியர்களின் சம்பளம் ஜனவரி முதல் அதிகரிப்பு

### நிதியமைச்சு அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

அனைத்து அரச ஊழியர்களினதும் சம்பளம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் குறைந்தபட்சம் 3 ஆயிரம் ரூபாய் முதல் அதிகபட்சம் 24 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட சம்பள ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப் ▶23

## அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் தமிழர்களுக்கு நல்ல முடிவு வரும்

### சுமந்திரன் எம்.பி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு பொறுப்புக்கூறலை முன்னெடுக்க வேண்டும் என்ற பிரேரணையைத் தீர்மானமாக நிறைவேற்றிய நாடுகளுடன் நாம் இப்போதே பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த நகர்வு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நல்ல ▶23

### புதிய அரசியலமைப்பினால் மட்டுமே
## தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க முடியும் - மாவை



(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு அவர்களின் கொள்கைகளில் முன்னுரிமை அளிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ▶23



றொமானியா

(ஐரோப்பா) வேலைவாய்ப்பு

4 Star Hotel Vacancies

Cook/Cook Helper
Waiter/Cleaner
Dish Washer
Laundry Staff

உணவு, தங்குமிடம்
மருத்துவ வசதிகள் இலவசம்!

சம்பளம் (600–1,100 US$)

Rs. 99,500 தொடக்கம் Rs. 199,100

விசா – டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!

3 அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய...

எமரல்ட் ஐல் License No. 2268

077 00 38 215
077 55 46 956
021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lovers/Tean Girlsக்கு அருகே)
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk


# உரும்பிராயில் பட்டப்பகலில் வீடு உடைத்து திருட்டு

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் உரும்பிராயிலுள்ள பிரபல அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான அ.யோதிலிங்கத்தின் வீட்டில் நேற்றுப் பகல் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்துக்குச் சென்றுவிட்டு மதியம் 1.30 மணியளவில் வீடு திரும்பியபோது அவரது வீடு உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டுள்ளார்.

வீட்டின் பிரதான வாசல் கதவு, அறைக் கதவு, அலுமாரிகள் என்பன உடைக்கப்பட்டு வீட்டின் அறைக்குள் ஆடைகள் ஏனைய பொருட்கள் எல்லாம் சிதறுண்ட நிலையில் காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

குறித்த அறையில் இரண்டு கை மணிக் கூடுகளும் சிறிய தொகை பணமும் இருந்தன. இவையெதுவும் கொள்ளை போகாத நிலையில் அங்கிருந்த சட்டத்தரணி பாவித்த ஸ்மார்ட் கைத்தொலைபேசியொன்றும், புதிய ஸ்மார்ட் கைத்தொலைபேசியொன்றும் திருடப்பட்டுள்ளது.

அவரது ஸ்மார்ட் கைத்தொலைபேசிகள் திருடப்பட்டமை தொடர்பான விபரங்களைப் பெறுவதற்காக இன்றைய தினம் கோப்பாய்ப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஞா-18)

## 31ம் நாள் நீங்கா நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் வல்லி இரத்தினம் — திருமதி ஈஸ்வரநாதன் யோகேஸ்வரி

பிறப்பு 1931.02.02 | இறப்பு 10.11.2019 | பிறப்பு 1956.02.26

"மண்ணுலக தந்தை மகள் உறவின் அர்த்தம் அது நீங்கள் அல்லவா
விண்ணுலகம் அதை தெரிந்திடத்தான் ஒன்றாய் அழைத்ததோ!"

கடந்த 10.11.2019 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வங்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளைய தினம் காலை 6.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதுடன் முற்பகல் 11.00 மணிக்கு சபீண்டீகரண நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு எம்மை மீளாத்துயரில் விட்டுச் சென்றுள்ள அன்புத் தெய்வங்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சகாயமாதா கோவிலடி,
துன்னாலை வடக்கு.

தகவல்:- குடும்பத்தினர்
077 873 3783

(8466)

## கண்ணீர்க் காணிக்கை



சிரேஷ்ட நன்னடத்தை
உத்தியோகத்தர் **புவனேந்திரன்**
அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

**வேலுப்பிள்ளை சிற்றம்பலம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்துடன்

**நன்னடத்தை அதிகாரிகள் சங்கம்**
**வடக்கு மாகாணம்**

(C-8464)

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 - 03 - 1936



மறைவு 07 - 12 - 2019

### வேலுப்பிள்ளை சிற்றம்பலம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிற்றம்பலம் நேற்று முன்தினம் (07.12.2019) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற குலமணியின் அன்புக் கணவரும் மற்றும் சரவணன் (மகப்பேற்று வைத்தியர் - போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு), புவனேந்திரன் (அதிபர் - சான்றுபெற்ற பாடசாலை, அச்சுவேலி), ரவீந்திரன் (லண்டன்), மாதினி (பிரான்ஸ்), நளாயினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாருஜா, தயாழினி (உத்தியோகத்தர் - மாவட்ட நீதிமன்றம், ஊர்காவற்றுறை), புவனேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சசிவர்ணி, மருதினி, கோசினி, சாரகி, ஷமிரா, கௌதம், அபிநயா, யௌவனா, நந்தனா, ராஜசின்மயி, ராஜஸ்ரீமன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2019) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
0776099866

(C-8465)

## மரண அறிவித்தல்



### செல்வி பொன்னம்பலம் சிவகங்கை

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி பொன்னம்பலம் சிவகங்கை நேற்று (2019.12.08) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வியாழாச்சி, இலட்சுமி, மாரிமுத்து, கனகம்மா, விக்கினராஜா, கண்மணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பழனித்துரை, குமாரசுவாமி, சிவசம்பு, சதாசிவலிங்கம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2019.12.09) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆதிவைரவர் வீதி,
6ம் வட்டாரம், மண்டைதீவு.

தகவல்:- குடும்பத்தினர்
0775248549


(1429)

## தமிழர்களுக்கு உயிரச்சுறுத்தல் விடுத்த

# பிரியங்கவிற்கு எதிரான தீர்ப்பு குறித்து எழுத்துமூலம் அறிவிக்கப்படவில்லை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு





(அநுராதபுரம்)

**பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிற்கு எதிராக வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து இலங்கைக்கு இதுவரை எழுத்து மூலம் அறிவிக்கப்பட வில்லை என இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

அநுராதபுரத்தில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றில் வழங்கப்பட்டுள்ள அபராதம் தொடர்பாக எமக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இலங்கை இராணுவம் மற்றும் •வெளிவிவகார அமைச்சு இணைந்து இந்த விடயம் தொடர்பான தீர்மானங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறது.

அதற்கான நிதியைச் சேகரிப்பதற்கு எந்தவித தேவைப்பாடுகளும் இல்லை. ஏனெனில் இதனை வெளிவிவகார அமைச்சு முன்னின்று செயற்படுத்தி வருகின்றது. அதேநேரம் தேசிய பாதுகாப்பு தொடர்பிலும் நாம் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

அதற்கு முப்படைகளினதும் பொலிஸாரினதும் ஒத்துழைப்பையும் பெற்று நடைமுறைப்படுத்துவோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்தின் முன்னால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, புலம்பெயர் தமிழர்களை கழுத்தை அறுக்கும் சைகையைக் காட்டி அச்சுறுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இதனையடுத்து அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தபோதும் இராஜதந்திர சிறப்பந்தஸ்து கருதி அவர் விடுவிக்கப்பட்டார். பின்னர் அவர் இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டார். எனினும் அவருக்கு இராஜதந்திர சிறப்பந்தஸ்து இருப்பதில் சந்தேகம் எழுப்பப்பட்டு மீண்டும் வழக்குத் தொடரப்பட்டிருந்த நிலையில், அந்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டது.

இதன்படி அவரது சைகை, அச்சுறுத்தும் வகையிலானது என்பதை உறுதி செய்த நீதிமன்றம், அவருக்கு 2400 பவுண்ட் (இலங்கை மதிப்பில் 5 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்) அளவில் அபராதம் விதித்து தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரியங்கவிற்கான அபராதத்தொகையை அரசு செலுத்தவேண்டுமாம்- கம்மன்பில



(கொழுமபு)

புலம்பெயர் தமிழர்களை கழுத்தை அறுக்கும் சைகையைக் காட்டி அச்சுறுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் அபராதத் தொகையை அரசாங்கம் செலுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் அபராதத்தை அரசாங்கம் செலுத்தத் தவறினால், மக்களிடம் ஒரு ரூபாய் விகிதம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

இதேவேளை எதிர்வரும் தேர்தலில் புலம்பெயர் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறான நடவடிக்கையை எடுப்பது கண்டிக்கத்தக்கது என்றும் உதய கம்மன்பில கூறினார்.

பிரித்தானியத் தலைநகர் லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த புலம்பெயர் தமிழர்களைப் பார்த்து 'கழுத்தை அறுக்கும்' சைகையை காண்பித்து அச்சுறுத்தியதற்காக அவருக்கு 2500 பவுண்ட்ஸ் அபராதம் விதித்து வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடவுச்சீட்டு படம் எடுக்கையில் பொட்டை அகற்ற வேண்டும்

### சர்வதேச நியமங்கள் என்கிறது குடிவரவு குடியகல்வு திணைக்களம்

(கொழும்பு)

புதிதாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் அல்லது தமது பழைய கடவுச்சீட்டை புதுப்பிக்கும் தமிழ்ப் பெண்கள் நெற்றிப் பொட்டுடன் படம் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது.

இது தொடர்பாக தமிழ்ப் பெண்களிடமிருந்து வந்த தொடர்ச்சியான முறைப்பாடுகளையடுத்து மேற்படி திணைக்களத்திடம் கேட்கப்பட்ட போதே அதன் ஊடகப்பேச்சாளர் பி.ஜி.ஜி.மிலிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சர்வதேச நியமங்களின் அடிப்படையில் இலங்கைக் கடவுச்சீட்டு தரப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நாம் குறித்த சர்வதேச நியமங்களுக்கு கட்டுப்பட்டவர்களாக இருத்தல் அவசியம். ICAO எனப்படும் சர்வதேச சிவில் விமானக் போக்குவரத்து அமைப்பானது புதிய கடவுச்சீட்டுக்கான படம் எப்படி இருக்க வேண்டும் என்ற வழிகாட்டுதல்களை எல்லா நாடுகளுக்கும் வழங்கியுள்ளது.

அதன்படி கடவுச்சீட்டிலுள்ள படத்தில் முகத்தில் எந்தவிதமான செயற்கை அடையாளங்களும் இருக்க முடியாது. ஆகையால் நாம் நெற்றியில் பொட்டிருப்பதை தவிர்க்கச் சொல்கிறோம்.

கூடுதலாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் பெண்களே பாதிப்படைகின்றனர். அதாவது பொட்டு உள்ள படத்தை கட வுச்சீட்டில் கொண்டிருக்கும் பெண்கள் சில சந்தர்ப்பங்களில் பொட்டு இடாது சில நாடுகளுக்கு போகும் அவர்களை சில நாடுகளின் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நிறுத்தி வைத்த சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அதுமட்டுமன்றி குறித்த நாடுகளுக்கான விசாக்களை பெறுவதும் இவர்களுக்கு சவாலாகவே இருக்கின்றன. இக்காரணங்களை வைத்து விசாக்கள் நிராகரிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆகவே இது அவர்களின் நன்மைக்காகவேயன்றி வேறு தனிப்பட்ட காரணங்கள் கிடையாது. இருப்பினும் இது தொடர்பில் முரண்களும் ஏற்பட்டிருக்கின்றன.

நாம் இது தொடர்பில் மக்களுக்கு விளக்கங்களை கொடுத்து வருகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

ஊவா மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள தமிழர்கள் கண்டியில் அமைந்துள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கே சாதாரண கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கச்செல்வர்.

இந்நிலையில் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட கடவுச்சீட்டு படமெடுக்கும் புகைப்பட நிலையங்களில் எடுக்கப்பட்ட படங்களை மேற்படி திணைக்களம் நிராகரித்து பொட்டுகளைத் தவிர்த்து அங்கு மீண்டும் படமெடுக்க அழுத்தம் கொடுப்பதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை நெற்றிப்பொட்டு என்பது தமிழ்ப் பாரம்பரியம் மற்றும் கலாசாரத்துடன் தொடர்புடைய அம்சம் என்பதால் அதைத் தவிர்த்து படமெடுப்பதற்கு பெண்கள் தயங்குவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## மூன்று வருடங்களில் 1000 இலங்கையர்கள் வெளிநாடுகளில் பலி!

(கொழும்பு)

கடந்த மூன்று வருடங்களில் சுமார் 1000 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இதனைத் தெரிவித்தது. இதன்படி 29 நாடுகளில் பணியாற்றிய 1043 பேர் உயிரிழந்தனர்.

பல்வேறு காரணங்களில் இந்த உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. 2019 ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 4 ஆம் திகதி வரை 194 பேர் பணிகளில் ஈடுபட்டிருக்கும்போது உயிரிழந்தனர்.

• இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த உயிரிழப்பாகும். 2018 ஆம் ஆண்டு இந்த இறப்புத்தொகை 239 ஆக இருந்தது.

2016- 2019 வரையில் சவுதியில் 362பேரும், குவைத்தில் 214பேரும் கட்டாரில் 133 பேரும், தென்கொரியாவில் 32 பேரும் உயிரிழந்தனர்.

இதேவேளை வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் 2018 இல் மாத்திரம் இலங்கைக்கு 7 பில்லியன் டொலர்களை நாட்டுக்கு அனுப்பியுள்ளனர். இது மொத்த தேசிய வருமானத்தில் 7 வீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிம்மன்ஸ்,பூரான் அதிரடியில் இந்தியாவை பழிதீர்த்த மே.தீவுகள்



இந்தியாவுடனான 2-வது ரி20 ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அதிரடி வெற்றியைப் பெற்றது.

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 2-வது ரி20 ஆட்டம் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. டாஸ் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் இந்திய அணியை பேட்டிங் செய்ய அழைத்தது. இதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 170 ரன்கள் எடுத்தது.

171 ரன்கள் என்ற வெற்றி இலக்குடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி களமிறங்கியது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக லெண்ட்ல் சிம்மன்ஸ் மற்றும் எவின் லீவிஸ் களமிறங்கினர். அந்த அணி தொடக்கத்தில் வழங்கிய 2 கேட்ச் வாய்ப்புகளை இந்திய அணி தவறவிட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்ட இருவரும் அந்த அணிக்கு நல்ல தொடக்கம் அளித்தனர். இந்த இணை முதல் விக்கெட்டுக்கு 9.5 ஓவர்களில் 73 ரன்கள் சேர்த்தது. எவின் லீவிஸ் 40 ரன்களுக்கு முதல் விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

இந்த அடித்தளத்தைப் பயன்படுத்திய ஹெத்மயர் மற்றும் சிம்மன்ஸ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிக்குத் தேவையான ரன் ரேட்டை குறைத்தனர். அதேசமயம், இந்தியப் பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடியும் அளித்தனர். 3 சிக்ஸர்கள் அடித்து மிரட்டிய ஹெத்மயர் விராட் கோலியின் சூப்பர் மேன் கேட்ச்சால் 23 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். இதனிடையே தொடக்க ஆட்டக்காரர் சிம்மன்ஸ் தனது அரைச்சதத்தை எட்டினார்.

இருந்தபோதிலும், அடுத்து களமிறங்கிய நிகோலஸ் பூரான் அற்புதமாக சிக்ஸரும், பவுண்டரியுமாக அடித்து இந்தியாவுக்கு மேலும் நெருக்கடியை அளித்தார். இதன்மூலம், 18.3 ஓவர்களிலேயே மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 173 ரன்கள் எடுத்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சிம்மன்ஸ் 45 பந்துகளில் 4 பவுண்டரி, 4 சிக்ஸர் உட்பட 67 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பூரான் 18 பந்துகளில் 4 பவுண்டரி, 2 சிக்ஸர் உட்பட 38 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய அணித் தரப்பில் வாஷிங்டன் சுந்தர் மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றதன் மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடர் 1-1 என சமனில் உள்ளது.

# 28 வருடங்கள் இடைவெளிக்கு பிறகு மெய்வல்லுனரில் சம்பியனாகியது இலங்கை

## இந்தியாவை பின்னுக்கு தள்ளியது



நேபாளத்தில் நடைபெற்று வரும் 13 ஆவது தெற்காசிய விளையாட்டு விழா மெய்வல்லுனர் போட்டிகளில் மாத்திரம் 15 தங்கப் பதக்கங்களை வென்ற இலங்கை அணி மெய்வல்லுனர் போட்டிப் பிரிவுகளில் சம்பியன் என்ற கௌரவத்தைப் பெற்றுக்கொண்டது. இந்த வரலாற்று சாதனையானது 28 வருடங்களுக்குப் பிறகு இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளி அதிக தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது இலங்கை மெய்வல்லுனர் அணி.

1991 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டு விழாவில் இலங்கை மெய்வல்லுனர் அணி 15 தங்கப் பதக்கங்களை வென்றிருந்தது. அதன்பிறகு இம்முறைதான் அந்த 15 மெய்வல்லுநனர் தங்கப்பதக்கங்களை சமப்படுத்தியயுள்ளது.

மெய்வல்லுனர் போட்டிகளின் 5 ஆவது நாளான நேற்றைய தினம் 9 போட்டி நிகழ்ச்சிகளுக்கான இறுதிப் போட்டிகள் நடைபெற்றதுடன், இதில் நடைபெற்ற 8 போட்டிகளில் இலங்கை அணி வீரர்கள் தங்கப் பதக்கங்களை வென்று அசத்தியிருந்தனர்.

அதேவேளை பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் இலங்கை சார்பாக பங்கேற்ற ஹிருனி விஜேரத்ன தங்கப்பதக்கம் வென்றெடுத்தார்.


35 வருடகால தெற்காசிய விளையாட்டு விழா வரலாற்றில் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் இலங்கை பெற்றுக் கொண்ட முதலாவது தங்கப் பதக்கம் இது வென்பது விசேட அம்சமாகும்.

இறுதியாக 1999ஆம் ஆண்டு காத்மண்டுவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான மரதனில் இனோகா வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## தெற்காசிய விளையாட்டுப் போட்டி

# 8 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்த மாலைதீவு பெண்கள் கிரிக்கெட் அணி



நேபாளத்தில் இடம்பெற்று வரும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்கள் கிரிக்கெட் போட்டியொன்றில் மாலைதீவு வீராங்கனைகள் 9 பேர் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

நேபாளத்துக்கு எதிராக இடம்பெற்ற 'ருவெண்டி 20' போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மாலைதீவு அணி 11.3 ஓவர்களில் வெறும் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனை அய்மா அஷ்சாத் மட்டும் ஒரு ஓட்டம் எடுத்தார். ஏனைய ஒன்பது பேர் ஓட்டமெதனையும் பெறவில்லை. 7 ஓட்டங்கள் அகலப்பந்துகள் (வைட்) மூலமாக கிடைத்தன.

இந்த ஆட்டம் ஐ.சி.சி. அங்கீகாரம் பெற்றது என்பதால் பெண்கள் சர்வதேச 'ருவெண்டி 20' கிரிக்கெட்டில் ஒரு அணியின் இரண்டாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

மாலி அணி 6 ஓட்டங்களில் முடங்கியதே மோசமான ஓட்ட எண்ணிக்கையாக நீடிப்பது குறிப் பிடத்தக்கது. இந்த இலக்கை நேபாளம் அணி 7 பந்துகளில் எட்டிப்பிடித்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## பெண்கள் பிக்பாஸ் ரி-20 கிரிக்கெட் தொடர்

# அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் அணியை வீழ்த்தி பிரிஸ்பேன் ஹீட் அணி சம்பியன் வென்றது

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பெண்கள் 'பிக் பாஷ்' ருவெண்டி 20 லீக் இறுதிப் போட்டியில் அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் அணியை வீழ்த்தி பிரிஸ்பேன் ஹீட் அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்று வந்த பெண்களுக்கான பிக் பாஷ் தொடரில் பிரிஸ்பேனில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரிஸ்பேன் ஹீட் அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பிரிஸ்பேன் ஹீட் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களை குவித்தது.

பின்னர் 162 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய பிரிஸ்பேன் ஸ்டிரைக்கர்ஸ் 18.1 ஓவரில் 4 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 162 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

தொடக்க வீராங்கனை பெத் மூனே ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும் ஜொனாஸ்சென் 33 ஓட்டங்களையும் அணிக்காகப்-பெற்றுக்கொடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.



# படகு கவிழ்ந்து விபத்து ஒருவர் பரிதாபமாகப் பலி!

## ❖ இருவர் படுகாயம்
## ❖ இருவர் மாயம்

(திருமலை)

திருகோணமலை உப்பாறு கடற்பரப்பிற்கு மீன்பிடிக்கச் சென்ற படகு கவிழ்ந்ததில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்தில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். மேலும் இந்தச் சம்பவத்தில் இருவர் காணாமல் போயுள்ள நிலையில் அவர்களை தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# யாழில் குளத்திலிருந்து சடலம் மீட்பு

## தென்னிலங்கையைச் சேர்ந்தவர் எனத் தகவல்



(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் புங்கன்குளம் பகுதியிலுள்ள குளத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். சடலமாக மீட்கப்பட்டவர் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுப்பூச்சி என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்ட இவர் குடும்பத்தவர்கள் கைவிட்ட நிலையில் யாழ்ப்பாணத்திற்கு வந்து இங்கு தெரிந்தவர் ஒருவரின் வீட்டில் தங்கி இருந்துள்ளார்.

இந்நிலையில் குளத்தில் சடலம் ஒன்று காணப்படுவது தொடர்பில் பிரதேச மக்கள் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு நேற்றுக் காலை தகவல் வழங்கினர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். (இ-18-101)

# நாகர்கோவில், குடாரப்பு பகுதிகளில் பாரிய மணல் கொள்ளை!



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மற்றும் குடாரப்பு பகுதிகளில் பாரியளவில் மணல் கொள்ளை இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அப்பகுதிக்கு சென்ற அரசியல்வாதிகளைக் கண்டதும் மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் மாற்றுப் பாதையால் தப்பிச் சென்றனர்.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக கனரக வாகனங்களில் மணல் கொள்ளை இடம்பெறுவதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து அவரும், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் சி.பிரசாத், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உ.நிதர்சன் ஆகியோர் அப்பகுதிக்குச் சென்றனர்.

மணல் மேடுகளிலிருந்து உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றி வரப்பட்டு பின்னர் கனரக வாகனம் மூலம் மண் கொள்ளை இடம்பெற்றுவருகின்றது.

மேற்படி பிரதிநிதிகள் அங்கு சென்றதையடுத்து மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரங்கள் மாற்றுப் பாதையால் தப்பிச் சென்றுள்ளன. (இ-60)

# சுற்றுலாத்துறையில் அதீத மாற்றம்

(கொழும்பு)

புதிய அரசாங்கக் கொள்கை அறிக்கை சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு அதிக வாய்ப்பை அளித்துள்ளதாக சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் காலத்தில் பத்து பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டுவதே தமது நோக்கமென அவர் தெரிவித்தார்.

சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற காலாண்டு பயிற்சித் திட்டங்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்தோடு எதிர்வரும் 2020 - 2025 ஆம் ஆண்டுக்குள் குறித்த இலக்கை எட்டுவதே தமது நோக்கமாகும் எனவும் இதற்காக சுற்றுலா அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)


பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(C-8454)

றொங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# மக்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் பரு. துறைமுகத்தை நான் அமைப்பேன்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(கரணவாய்)

மக்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் பருத்தித்துறை துறைமுகத்தை நான் அமைத்து முடிப்பேன். அதைச் செய்யும்போது என்னை யாரும் தடுக்க முடியாது என கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமராட்சியிலுள்ள மீனவர் சங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இக் கலந்துரையாடலில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை துறைமுகத்தை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. முன்னர் இது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் நடந்திருக்கின்றன. அவை சரியாக முன்னெடுக்கப்படவில்லை. இப்போது எங்களுடைய அமைச்சின்கீழ்அது வந்திருக்கிறது.

பருத்தித்துறை துறைமுகத்தை நான் முன்னெடுப்பேன். அதற்கு நான் பின்னிற்கப் போவதில்லை. அது எங்களது மக்களுக்கு தேவை. இங்குள்ள ஐம்பது பேருக்கு பல நாள் கலம் என அழைக்கப்படும் ஆழ்கடல் மீன்பிடிப் படகைப் பெற்றுக் கொடுப்பேன்.

பருத்தித்துறை துறைமுகத்தை நான் அமைக்கும் போது என்னை யாரும் தடுக்க முடியாது. நான் அதைச் செய்வேன். இந்த பகுதி மக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் நான் பருத்தித்துறை துறைமுகத்தை அமைப்பேன் எனத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி அமைப்பாளர் விசிந்தன், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், மீனவ சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (இ-60)

# ரயில்வே முகாமைத்துவ பணிகளுக்காக ஜீ.பி.எஸ்.தொழில்நுட்பம் அமுல்

(கொழும்பு)

ரயில்வே முகாமைத்துவ பணி களுக்காக ஜீ.பி.எஸ் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது. மூன்று கட்டங்களாக இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

முதல் கட்டத்தின் கீழ் 20 ரயில்களுக்கு இத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாக ரயி ல்வே பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித் தார். ரயில் போக்குவரத்தில் நிக ழும் காலதாமதங்களை இத் தொழில்நுட்பம் மூலம் விரிவாக அறிவிக்க முடியும்.

ரயில்வே திணைக்களமும், பாதுகாப்பு அமைச்சும் இணை ந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


# துயர் பகிர்கின்றோம்

அமரர் கந்தையா தனபாலசிங்கம்



எமது பாடசாலையில் அதிபராக இருந்து சேவையாற்றிய அமரர் கந்தையா தனபாலசிங்கம் அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நடேஸ்வரக்கல்லூரி, காங்கேசன்துறை.

(1420)

# சாவகச்சேரியில் கலாசார விழா







(சாவகச்சேரி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம், சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் தென்மராட்சி பிரதேச கலாசார பேரவை, கலாசார அதிகார சபை என்பன இணைந்து நடத்திய கலாசார விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் கலைஞர் கல்வயல் வே. குமாரசாமி அரங்கில் தென்மராட்சி பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தென்பொழில் பிரதேச மலர் வெளியீடும் இடம் பெற்றது. இலங்கை திறந்த பல்கலைக்கழக பணிப்பாளர் கி.கந்தவேள் நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

கைதடி மேற்கு சரஸ்வதி கலை மன்றத்தின் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து இடம் பெற்றது. கலைஞர்கள் கலைச் சாகர விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய கலை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. (இ-30-114)

# நூலகத்திறப்புவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் நல்லிணக்கபுர சனசமூக நிலையத்தில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் சேரன் நூலகத் திறப்பு விழா இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் கலந்து கொள்வார். (இ-2)

# கனவுகளும் பலன்களும்

## கனவில் நச்சுப் பிராணி வந்தால்

தேளைக் கனவில் கண்டால் நன்மைகள் ஏற்படும். தேளைக் கொல்வது போலக் கனவு கண்டாலும் நல்ல பலன்களே நடக்கும். ஆனால் தேள் தன்னைக் கொட்டி அதனால் வேதனைப்படுவதாகக் கனவு கண்டால் சங்கடங்கள் ஏற்படும்.

சாரைப் பாம்பைக் கனவில் கண்டால் எதிரிகளால், காதலனாலோ அல்லது நண்பனாலோ அவள் ஏமாற்றப்படுவாள். குளவி கொட்டுவது போலக் கனவு கண்டால் எதிர்பாராத வகையில் விபத்து ஏற்படும். பூரான் கடித்து விட்டது போலக் கனவு கண்டால் தோல் வியாதிகள் ஏற்படும்.

நல்லபாம்பு கொத்த வருவது போலக் கனவு கண்டால் கஷ்டங்கள் உண்டாகும். நல்லபாம்பு கடித்து விட்டதாகக் கனவு கண்டால் கஷ்டங்கள் விலகி விட்டதாகப் பொருள். நல்ல பாம்பு படமெடுத்து ஆடுவதாகக் கனவு கண்டால் தொழிலில் வருமானம் அதிகரிக்கும். நல்ல பாம்பு இறந்து கிடப்பது போலக் கனவு கண்டால் துக்கமான செய்தி ஒன்று வந்து சேரும். நல்ல பாம்மை அடித்துக் கொல்வதாகக் கனவு கண்டால் அதிர்ஷ்டங்கள் விலகிப் போய்விடும்.

நீர் நிலையில் தண்ணீர்ப் பாம்புகள் கூட்டமாக இருப்பது போலக் கனவு கண்டால் திடீரென்று பணம் வரும். அதனால் வாழ்க்கையில் கஷ்டம் தீரும்.

பச்சைப் பாம்பு மரத்தில் இருந்து கீழே விழுந்து ஓடுவது போலக் கனவு கண்டால் அன்று முதல் துன்பங்கள் விலகிப்போகும். எடுத்த காரியங்களில் வெற்றி ஏற்படும்.

பச்சைப்பாம்பு உங்கள் மேலே விழுந்து பின்னர் கீழே விழுந்து ஓடுவது போலக் கனவு கண்டால் உங்களுடைய வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டு தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சாரைப்பாம்பும் நாகபாம்பும் ஒன்றாக இணைந்து நிற்பது போலக் கனவு கண்டால் அது அதிர்ஷ்டக் கனவு. அதனால் பெருஞ் செல்வம் சேரும். வாழ்நாள் முழுவதும் வளமானதாகும்.

மலைப்பாம்பைக் கனவில் கண்டால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் உண்டாகும். மலைப்பாம்பு உடலைச் சுற்றிக் கொள்வதாகக் கனவு கண்டால் ஆபத்துக்கள் நீங்கும். கிணற்றுக்குள் பாம்பு இருப்பது போலக் கனவு கண்டால் அதிர்ஷ்டம் உண்டாகும்.

பொதுவாகப் பாம்புகள், தேள், அட்டை போன்றவை வீட்டிற்குள் நுழைவது போலக் கனவு கண்டால் எடுத்த காரியம் வெற்றியடையும். அவ்வற்றை அடிப்பது போலக் கனவு கண்டாலும் நல்லது. தான் துன்பங்கள் விலகி வாழ்வில் இன்பம் மலரும்.

## ஆளுநர் செயலகத்தால்

# பதவிக்காலம் நிறைவடைய முன்னர் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னாள் ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய தற்காலிக இணைப்பு உத்தியோகத்தர்களாக உள்ளீர்க்கப்பட்டவர்களின் பதவிக் காலம் நிறைவடைய முன் தமது முன்னைய பதவி இடங்களுக்குச் செல்லுமாறு வடமாகாண ஆளுநர் செயலகம் கடிதம் அனுப்பியுள்ளது.

வடமாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் 11.07.2019 ஆம் திகதி இடம் பெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் 24.07.2019 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வடமாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் பணியாற்றிய 14 உத்தியோகத்தர்கள் 6 மாதகால தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டு ஆளுநர் செயலகத்திற்கு மாற்றப்பட்டனர்.

வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆர்.எஸ்.துரைராஜா கையொப்பமிட்ட கடிதத்தின் மூலம் குறித்த உத்தியோகத்தர்கள் பணிக்கு அமர்த்தப்பட்ட நிலையில் முடிவுறும் நிலையில் எதிர்வரும் தைமாதம் குறித்த பதவிக்காலம் இம்மாதம் 4 ஆம் திகதி அனுப்பப்பட்ட பிரதம செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் வடமாகாண ஆளுநரின் செயலாளரால் கடந்த 6 ஆம் திகதி முதல் தற்காலிக இணைப்பு உத்தியோகத்தர்கள் தங்கள் முன்னைய பதவி இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. (இ-10)

## மீனம்



வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

## மேடம்



சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், போசன சுகமுண்டு.

## இடபம்



பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், எதிலும் பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள்.

## மிதுனம்



பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

## கும்பம்



வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

## இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு |
| | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் சித்திரை | | |
| சனி, கேது.குரு. சுக் | சூரி.புத | செவ் | |

09.12.2019

கார்த்திகை 28, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

துவாதசி முற்பகல் 10.08 மணிவரை

பரணி பின்னிரவு 5.47 மணிவரை

சுபநேரம் 12.18-1.48 மணிவரை

இராகுகாலம் 7-48-9-18 மணிவரை

கார்த்திகை சோமவாரம்,

பிரதோச விரதம்

**வளவன்**

## கடகம்



கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

## மகரம்



உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

## சிம்மம்



சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும், சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

## தனுசு



மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

## விருச்சிகம்



பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், உடன்பிறப்புக்கள் உங்களுக்கு உதவ முன்வருவர், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம்.

## துலாம்



நண்பர்களின் மூலம் சில நன்மைகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு.

## கன்னி



மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

# மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கீழ்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01.பதவி - பொதுமுகாமையாளர்**
குறியீட்டு இலக்கம் - 101 / 11
04/2018 சம்பள அளவுத்திட்டம் - 17190 - 170X10 - 185X10 - 20740

**கல்வித்தகைமை**
அ)கூட்டுறவு ஊழியர் 12 வது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 13 வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமை.

அல்லது

இ)கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 01 வருட கால அனுபவம் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 01 வருட சேவையாற்றிய அனுபவம்.

**02.பதவி - கணக்குப் பதிவாளர்**
குறியீட்டு இலக்கம் - 301/13
04/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம் - 16365 - 140X10 - 150X10 - 19265

**கல்வித்தகைமை**
அ)கூட்டுறவு பணியாளர் 14 வது சம்பளத்திட்ட கணக்குப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 15 வது சம்பளத்திட்ட கணக்கு பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**03.பதவி - கிராமிய வங்கி முகாமையாளர்**
குறியீட்டு இலக்கம் - 205/13
04/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம் - 16365 - 140X10 - 150X10 - 19265

**கல்வித்தகைமை**
அ)கூட்டுறவு ஊழியர் 14 வது சம்பளத் திட்டத்தில் கிராமிய வங்கி பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 15 வது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கிப்பிரிவு பதவியொன்றில் ஆகக்குறைந்தது 4 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரத்துடன் கிராமிய வங்கிப் பகுதி இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**04. பதவி - வெளிக்கள உத்தியோகத்தர்**
குறியீட்டு இலக்கம் - 209/13
04/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம் - 16365 - 140X10 - 150X10 - 19265

**கல்வித்தகைமை**
அ)அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையிலான 2 வருட கற்கை நெறி ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
ஆ)கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரம் / க.பொ.த.சாதாரணதரம் / தே.க.பொ.த.பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் / வர்த்தக எண் கணிதம் / தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடங்கி 4 திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு கால அனுபவம்.

**05 பதவி - சாரதி**
குறியீட்டு இலக்கம் - 312/15
04/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம் - 15545 - 130X10 - 140X10 - 18245

**கல்வித்தகைமை**
அ)05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் மோட்டார் கார் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**மேற்குறிப்பிட்ட 5 வகையான பதவிகளுக்குமான பொதுவான நிபந்தனைகள்**

1.பதவியின் தகைமை:- நிரந்தரமானதாகும்.
2.வயதெல்லை:- 18-45 தற்போது சேவையிலுள்ள கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
3.பால் வகை:- பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
4.விண்ணப்பப் படிவங்களை சுயமாக தயாரித்து பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.
5.விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி:- 24.12.2019
6.விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

தலைவர்,
புது/பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்,
கைவேலி, புதுக்குடியிருப்பு மேற்கு,
புதுக்குடியிருப்பு.

7.கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக இதரப்படிகள் இயக்குநர் சபைத் தீர்மானத்திற்கு அமைவாக வழங்கப்படும்.

C-8467

தலைவர்
மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)


## ஆயுதங்களைக் காட்டி வழிப்பறிக் கொள்ளை

**பொலிஸார் விசாரணை**

(பெரியகல்லாறு)

மட்டக்களப்பு- பெரியகல்லாறு பகுதியில் ஆயுதங்களுடன் வந்த சிலர் வழிப்பறி கொள்ளைகளை மேற்கொண்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில் பெரியகல்லாறு ஆலையடி பகுதியில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாக முறையிடப்பட்டுள்ளது.

இரண்டு பேர் ஆயுதங்களுடன் நின்றுகொண்டு. குறித்த வீதியூடாகப் பயணித்தவர்களை வழிமறித்து. அவர்களிடம் இருந்த பணம் மற்றும் கையடக்க தொலைபேசிகளை பறித்துச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மீன் வியாபாரிகள், மரக்கரி வியாபாரிகள், தொழிலுக்குச் சென்றவர்கள் எனப் பலரிடம் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(இ-7)

## சாவகச்சேரி பிரதேச செயலாளர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி தேவநந்தினி பாபு வட மாகாணப் பேரவைச் செயலாளராக பணி இடமாற்றம் செய்யப்பட்டவுள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் இடமாற்றச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் குறித்த இடமாற்றம் வழங்கப்படவுள்ளது. (இ-10)

## மிளகு விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மிளகின் விலை அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த மிளகின் விலை, தற்போது 800 ரூபாய் முதல் 850 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

மிளகின் ஏற்றுமதியைத் தடை செய்வதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் காரணமாக, மிளகின் விலை அதிகரித்துள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்தது. (இ-7)

## டச்சுக் காலத்தில் கட்டப்பட்ட சுவர் இடிந்து வீழ்ந்தது!



(காலி)

காலி, கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள பழைய தபால் நிலையத்தின் ஒரு பகுதி நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடிந்து வீழ்ந்தது.

இந்த அனர்த்தம் காரணமாக யாரும் காயமடையவில்லை எனத் தெரிவித்த அதிகாரிகள், பகல் நேரத்தில் இது இடிந்து வீழ்ந்திருந்தால் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கும் எனவும் தெரிவித்தனர்.

டச்சுக் காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கட்டடம் பாழடைந்த நிலையில் இருந்ததுடன், தபால் நிலையமும் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "இலங்கையில் இரு இராச்சியங்கள்"

# கொன்சவேர்டிவ் கட்சியின் நிலைப்பாடு அரசியல் நாடகத்தை வெளிக்காட்டுகிறது

## அமைச்சர் கெஹலிய சுட்டிக்காட்டு



(கண்டி)

**இலங்கையில் இரண்டு இராச்சியங்கள் உருவாக ஒத்துழைப்பு வழங்கப்படும் என்ற பிரித்தானிய கொன்சவேர்டிவ் கட்சியின் நிலைப்பாடானது, அரசியல் நாடகத்தையே வெளிக்காட்டுவதாக இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

கண்டியில் நேற்றுக்காலை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன, சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

ஜெனிவா தீர்மானத்திற்கு அமைவாக பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமான ஒன்றாகும்.

ஆனால், இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்க ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை. அத்தோடு, நேரில் பார்த்ததைப் போன்றுதான் ராஜித சேனாரட்ன கருத்து வெளியிட்டிருந்தார்.

எனவே, அவரிடம் சாட்சி பெற்றுக்கொள்வதும் முக்கியமானதாகும். இவரது இந்தக் கருத்துக்கள் சர்வதேச ரீதியாக அரசாங்கம் தொடர்பான பிழையான எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு இலங்கை தொடர்பான தேவையில்லாத மற்றும் பொய்யான கருத்துக்கள் ஏற்பட்டமைக்கு இவரும்தான் பொறுப்புக் கூறவேண்டும்.

இதுதொடர்பாக இவரிடம் நிச்சயமாக வாக்குமூலம் பெற்றுக் கொள்ள வேண்டும். அதே நேரம் இன்னுமொரு விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

அதாவது பிரித்தானியாவின் கொன்சவேர்டிவ் கட்சியின் பொதுத் தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தில் 53 ஆவது பக்கத்தில், இலங்கையில் இரண்டு இராச்சியங்கள் உருவாக ஒத்துழைப்பு வழங்கப்படும் என மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவர்கள்தான் அன்றிலிருந்து ஜனநாயகம் தொடர்பாக பேசி வருகிறார்கள். இலங்கைக்கு எதிராக இவர்கள் இவ்வாறு செயற்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல.

இதுதொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சும் நடவடிக்கை எடுத்துள்ளது. இது முற்று முழுவதும் அரசியல் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நாடகமாகும்.

அத்தோடு, ஜனாதிபதித் தேர்தலில் பிரிவினைவாதிகள் தோல்வியடைந்துள்ளார்கள். இதனை அனைவரும் உணர்வார்கள்.

நாம் 30 வருட யுத்தத்தையே இல்லாது செய்தவர்கள். எம்மால் எதிர்காலத்தில் சிறப்பான ஆட்சியைக் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தற்போது பொதுத் தேர்தலுக்குத்தான் நாம் ஆயத்தமாகி வருகின்றோம். பெரும்பாலும் எமது வெற்றிச் சின்னத்தில்தான் நாம் களமிறங்குவோம். இதில் எவ்வித இடையூறுகளும் ஏற்படாது என நாம் உறுதியாக நம்புகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# மின்னல் தாக்கி உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு ரூ.10இலட்சம் இழப்பீடு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளையில் மின்னல் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இழப்பீட்டுத் தொகையாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலையை வழங்கினார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அமைச்சரின் தலைமையில் பிரதேசத்தின் கடல் தொழிலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் கடல்சார் உயிரினங்களை வளர்ப்பது தொடர்பான ஆராய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது குறித்த இழப்பீட்டுத் தொகை பாதிக்கப்பட்ட



குடும்பத்தினருக்கு அமைச்சரால் வழங்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதியன்று கடும் மழைக்கும் மத்தியில் கடற்றொழிலுக்கு சென்றிருந்தபோது மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி முருகானந்தம் ஆனந்தராசா என்ற 3 பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார்.

இந்நிலையில் 10 இலட்சம் ரூபாவுக்கான இழப்பீட்டு காசோலையை இறந்தவரின் மனைவியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## பொதுத் தேர்தலில்

# பொலநறுவையில் மைத்திரி போட்டியிடவுள்ளதாக அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொலநறுவை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக அமைச்சர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

அரசியலிலிருந்து விலகக் கூடாது என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கோரிக்கையை ஏற்று மைத்திரிபால சிறிசேன பொலநறுவையில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்தார். (இ-7)

# ரஞ்சித் டி சொய்சாவிற்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி



(கொழும்பு)

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சாவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று இறுதி மரியாதை செலுத்தினார்.

ரஞ்சித் டி சொய்சாவின், கொடக்கவெல பிரதேசத்திலுள்ள வீட்டுக்கு சென்று ஜனாதிபதி இறுதி அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள்,பிரதேச வாசிகள் உள்ளிட்ட பலர், அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

சிங்கப்பூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 04ஆம் திகதி, ரஞ்சித் டி சொய்சா உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முதலாம் தர மாணவர் அனுமதி தேசிய வைபவம் 16-ம் திகதி

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள அரச உதவி பெறும், தனியார் பாடசாலைகளின் 2020 ஆம் ஆண்டுக்கான முதலாம் தர மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் தேசிய வைபவமும், வகுப்புக்களை ஆரம்பித்தல் தொடர்பான நிகழ்வு, 2020 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி நடைபெறும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

புதிய மாணவர்களை அனுமதிக்கும் சந்தர்ப்பத்தில், இரண்டாம் வகுப்பு மாணவர்களைக் கொண்டு முதலாம் தர மாணவர்களை வரவேற்குமாறும், மாணவர்களது அனுமதி இடம் பெறும் ஜனவரி 16 ஆம் திகதிக்கு முன்னர் புதிய முதலாம் தர மாணவர்களை அறிமுகமாக்கும் நிகழ்வுகளை நடத்தி முடிக்குமாறும் கல்வியமைச்சு அதிபர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-7)

# எதிர்க்கட்சி உறுப்பினர் எவரையும் இணைத்துக்கொள்ள மாட்டோம்

## அமைச்சர் சி.பி.ரத்நாயக்க திட்டவட்டம்

(கொழும்பு)

**எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவரையும் அரசாங்கத்துடன் இணைத்துக்கொள்ளும் நோக்கம் தமக்கு இல்லை எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்த அரசாங்கத்தை மட்டுமே கொண்டு செல்ல வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் வலியுறுத்தியுள்ளனர் எனவும் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.**



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான நபர்கள் சிலரை ஆளும் கட்சியுடன் இணைத்துக்கொண்டு பயணிக்க நடவடிக்கைகள் எடுப்பதாக சில தகவல்கள் வெளிவந்துள்ள நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலுடன் எமது பலம் என்ன என்பது மீண்டும் உணர்த்தப்பட்டுள்ளது. கடந்த நான்கரை ஆண்டுகால அரசாங்கத்தை மக்கள் நிராகரித்து கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் புதிய அரசாங்கம் ஒன்றை முன்னெடுத்துச் செல்வதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரை நாம் இணைத்துக்கொண்டு செல்ல முயற்சிகள் எடுப்பதாகவும் பாராளுமன்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இந்த கருத்தில் உண்மை இல்லை.

எக்காரணம் கொண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் எவரையும் எம்முடன் இணைத்துக்கொண்டு அதிகாரங்களை பங்கிட நாம் ஒருபோதும் தயாரில்லை.

அவ்வாறு செய்தால் அது மக்கள் ஆணையை மீறும் செயலாக அமையும். பொதுத் தேர்தலின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்த கூட்டணியாக நாம் போட்டியிடுவோம்.

இதில் வேறு எந்தக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பயணிக்கும் நோக்கம் எமக்கு இல்லை.


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக தலைமை தாங்கும் எமது புதிய அரசாங்கத்தில் எமது கட்சியின் உறுப்பினர்கள் மட்டுமே அங்கம் வகிப்பார்கள்.

கடந்த ஆட்சியின் மிகப்பெரிய ஊழல் வாதிகள், குற்றவாளிகள் உள்ளனர்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக ராஜித சேனாரட்ன போன்றவர்கள் கடந்த காலங்களில் இருந்தே பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்களை எம்முடன் மீண்டும் இணைத்துக்கொண்டு பயணிக்க நினைத்தால் எம்மையும் மக்கள் புறக்கணித்து தேர்தலில் தோற்கடித்து விடுவார்கள்.

ஆகவே எமது தனி அரசாங்கமே அடுத்ததாக ஆட்சி அமைக்கும். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதியும் பிரதமரும் உறுதியாக உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




யாழ்ப்பாண பல்கலைக்கழக 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று 11 ஆவது அமர்வுடன் நிறைவு பெற்றது. கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் மூன்று நாட்களில் 11 அமர்வுகளாக இடம்பெற்ற இத்தப் பட்டமளிப்பு விழாவில் கலைப்பீடம், விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம், விவசாய பீடம் மற்றும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 1369 உள்வாரிப் பட்டதாரிகளுக்கும் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 64 பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளுக்கும் 31 டிப்ளோமாதாரிகளுக்கும் பட்டங்களும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன், 348 வெளிவாரிப்பட்டதாரிகளின் பெயர்கள் வாசிக்கப்பட்டு பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# இழப்பீடு வேண்டாம்! பிள்ளைகளே வேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்






(நெளுக்குளம்)

அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள இழப்பீட்டுக்கான அலுவலகம் எமக்கு தேவையற்றது என எதிர்ப்பு தெரிவித்து வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியாவில் 1022 ஆவது நாளாக பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களே ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இழப்பீட்டு அலுவலகம் எமது பிள்ளைகளை மீள ஒப்படைக்குமா? எமது பிள்ளைகள் எமக்கு வேண்டும் என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (9-299)

### வவுனியாவில் டெங்கு தீவிரம்

# தனியார் கல்வி நிலையங்களை மூடுமாறு சுகாதாரத்துறை உத்தரவு

(நெளுக்குளம்)

வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்களூடாக டெங்கு நோய்த் தொற்று ஏற்படுவது சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் தனியார் கல்வி நிலையங்களை உடன் மூடுமாறு சுகாதார திணைக்களத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார திணைக்கள அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், வவுனியாவில் கடந்த 9 ஆம் மாதத்தில் இருந்து தற்போது வரை 35 மாணவர்கள் டெங்கு நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதில் 75 வீதமான மாணவர்களுக்கு தனியார் கல்வி நிலையங்களினாலேயே இத்தொற்று ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக குருமன்காடு, வைரவ புளியங்குளம் பகுதிகளில் இயங்கிவரும் 28 தனியார் கல்வி நிலையங்கள் மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு கல்வி நிலைய நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

மேலும் குருமன்காடு, வைரவபுளியங்குளம் பகுதிகளிலேயே அதிகமாக டெங்குவின் தாக்கம் இருப்பதனால் இப் பகுதிக்குரிய கிராம உத்தியோகத்தருக்கும் இது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கியுள்ளதுடன் இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளதாக மேலும்தெரிவித்தார். (9-250-299)

# முல்லையில் 1015 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை அழிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட 51,000 ஏக்கர் பெரும்போக நெற் செய்கையில், கன மழை காரணமாக 464 பயனாளிகளுடைய 1015 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநலி சேவைத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன் 1708 பயனாளிகளுக்குரிய, 6099 ஏக்கர் நெற்செய்கை பண்ணப்பட்டுள்ள நிலங்கள் வெள்ளம் மூடிக் காணப்படுகின்றதெனவும், தொடர்ச்சியாக குறித்த நெற்செய்கை நிலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்கும் பட்சத்தில், குறித்த நெற்செய்கைகளும் அழிவடையுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

கன மழையின் காரணமாக உடையார்கட்டுப் பகுதியில் 15 ஏக்கர் மேட்டுப் பயிர்களும் அழிவடைந்துள்ளதாகவும் அதே வேளை முல்லைத்தீவு கமநல சேவைத் திணைக்களத்தின் கீழுள்ள, 190 குளங்களில், 107 குளங்கள் வான் பாய்கின்றதெனவும் மேலும் ஐந்து குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றிய நிலையில், கோடாலிக்கல் குளம், விளாப்புக் குளம், அம்பகாமம் குளம், ஒலுமடுக் குளம், முறியாக்குளம் போன்ற குளங்களின் வால்கட்டுக்கள் வெட்டி விடப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (9)

# ஹெரோயினுடன் மூவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் இளைஞர்கள் மூவரை ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்துள் ளதாக பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

வவுனியா பொலிஸ் புல னாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் மாலை வவுனியா தேக்கவத்தை பகுதிகளில் நின்ற இளைஞர்களிடமிருந்து 1010 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளினை உடை மையில் வைத்திருந்த குற்றத் திற்காக 20,30,38 வயதுடைய இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர் களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசாரணைகளின் பின்னர் நீதி மன்றத்தில் முற்படுத்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு வதாக பொலிஸார் மேலும் தெரி வித்தனர். (9-299)

# டெங்கு நோயை கட்டுப்படுத்த மன்னாரில் விசேட நடவடிக்கைகள் முன்னெடுப்பு- அரச அதிபர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கென விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் மோகன்றாஸ் தெரிவித்துள்ளார்.

வாரம் தோறும் டெங்கு நோய் தாக்கம் தொடர்பாக ஆராயும் மீளாய்வுக் கூட்டம் இடம்பெற்று வருவதுடன் பராமரிப்பற்ற பொதுக் காணிகளில் உள்ள டெங்கு பரவக் கூடிய இடங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளதாவும் டெங்கு தாக்கம் ஏற்படக்கூடிய கற்கை நிலையங்களை உடனடியாக மூடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம் கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலை காணப்படுவதாகவும் இவ் ஆண்டில் மொத்தமாக 141 நோயாளர்கள் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிலும் மன்னார் பகுதியில் அதிக அளவு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் இதற்கான கட்டுப்பாட்டு முறைகள் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(கிளிநொச்சி)

காலநிலை மாற்றத்தால் அசாதாரண சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்கள் எதிர்கொண்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் மற்றும் நீரியல்வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

அண்மைய நாட்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த கனமழை மற்றும் வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலில் மக்களுக்கான இயல்பு வாழ்கையை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

வெள்ளப் பெருக்கின் பின்னர் ஏற்படக் கூடிய தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் இயற்கை அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தால் பாதிப்புக்களை கணிசமான அளவு குறைத்திருக்கலாம் என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் எதிர்காலத்தில் அதிகாரிகள் விழிப்புணர்வு செயற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (9-100-350)




# ஏ-35 வீதியில் உடைந்த பாலத்தை புனரமைத்த இராணுவத்தினர்





(கண்டாவளை)

வெள்ளத்தினால் உடைந்து போக்குவரத்து தடைப்பட்ட பரந்தன்- முல்லைத்தீவு பிரதான வீதியில் (ஏ-35) வள்ளிபுனம், காளிகோவிலடி பகுதியிலுள்ள பாலம் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு நேற்று போக்குவரத்திற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (9-315)



தானியங்கி இரத்தப் பரிசோதனை ரோபோ இயந்திரத்தைக் கண்டுபிடித்த வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி பி.ரோகி தாவை கௌரவிக்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. லண்டனைச் சேர்ந்த கந்தப்பிள்ளை திலீபனின் ஏற்பாட்டில் தமிழ் விருட்சத்தின் ஊடாக இக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சாதனை மாணவிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்புக்கள் இடம்பெற்றதுடன் சிறிதளவான நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா, மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், சிரேஷ்ட சட்டத்தரணி க.தயாபரன், வைத்திய கலாநிதி கோணேஸ்வரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் ச.கண்ணன், வர்த்தகர் சங்கம், வர்த்தகர் நலன்புரிச் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகள், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன் உட்பட மாணவியின் ஆசிரியை மற்றும் தாயார் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (படம்:-நெளுக்குளம் செய்தியாளர்)

# முதியோர் தின நிகழ்வு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட முதியோர் தின நிகழ்வுகள் பனிக்கன்குளம் முதியோர் பகல் பராமரிப்பு கட்டடத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

வடமாகாணத்தில் முதலிடம் பெற்ற பனிக்கன் குளம் முதியோர் பகல் பராமரிப்பு நிலைய கட்டடத்தில் பனிக்கன்குளம் முதியோர் சங்கத் தலைவர் கந்தன் சண்முகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் முதியோர்களது கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் வட மாகாணத்தில் முதலிடம் பெற்ற பனிக்கன்குளம் முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்துக்கு 25000 ரூபா பெறுமதியான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற முதியோர் தொடர்பான கவிதை போட்டியில் முதலிடம் பெற்ற ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மாணவி நயனாவுக்கு 10000 ரூபா பெறுமதியான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. (9-281)




# விசேட தேவையுடையோர் தின விழா

(சிவநகர்)

சர்வதேச விசேட தேவையுடையோர் தின மாகாண விழா எதிர்வரும் 10.12.2019 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.வனஜா செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய பொ. வாகீசன் கலந்து கொள்ளவுள்ளார்.(9-254)

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்போம்

## வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்










(குருமன்காடு)

பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தினை முன்னிட்டு "பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகளை ஒழிப்போம்" என வலியுறுத்தி வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு டாபிந்து கெலக்டிவ் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதுடன், நெல்லிஸ்டார் விருந்தினர் விடுதியில் பெண்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபெற்றது.

வவுனியா, கிளிநொச்சி, கம்பஹா ஆகிய இடங்களில் இருந்து வருகைதந்த இளைஞர், யுவதிகள் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இப் போராட்டத்திலும் அதன் பின் நடைபெற்ற செயலமர்விலும் டாபிந்து கெலக்டிவ் அமைப்பின் பிரதிநிதிகள், வவுனியா, கம்பஹா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பால்நிலை வன்முறைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், அவற்றில் இருந்து எவ்வாறு தம்மைப் பாதுகாத்து கொள்ளலாம்,

தேவையற்ற கர்ப்பங்களை எவ்வாறு தவிர்த்தல், குடும்பத்திட்டமிடல் முறைகள், சட்டவிரோதமான கருக்கலைப்பினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (9-250)

# பாவற்குளத்தின் 4 வான் கதவுகள் திறப்பு

(குருமன்காடு)

நீர் வரத்து அதிகரித்தமை காரணமாக வவுனியா, பாவற்குளத்தின் நான்கு வான் கதவுகளும் நேற்றுக் காலை திறக்கப்பட்டது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது 19 அடி 2 அங்குலமாக அதிகரித்துள்ளது. 19 அடி 4 அங்குலமே கொள்ளளவாக உள்ள நிலையில் நீர் வரத்து அதிகரித்தமையால் திடீரென ஏற்படும் பாதிப்பை தடுக்கும் பொருட்டு அதன் நான்கு வான் கதவுகளும் 2 இஞ்சி திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் பாவற்குளத்தின் கீழான பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்குமாறு மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (9-250)

# குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் வவுனியாவில் திறந்து வைப்பு



(நெளுக்குளம்)

வவுனியா, ஆசிகுளம், ஈஸ்வரிபுரம் ஆகிய பகுதிகளில் குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது. இலங்கை றொட்டறிக் கழகம் மற்றும் லாம் லங்கா நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ஜே.பிரதீபன் தலைமையில் ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபாய் நிதி உதவியில் வவுனியாவில் ஆசிகுளம், ஈஸ்வரிபுரம் ஆகிய இரு கிராமப்பகுதிகளிலுள்ள மக்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட இரு குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் மக்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வில்வரட்ணம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பிறைசூடி, ஆசிகுளம் கிராம உத்தியோகத்தர் ஜெனகன், சமுர்த்தி அலுவலகர், நிறுவனத் தலைவர்கள், கிராம அமைப்புக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (9-299)

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பாலம் மக்களால் சீரமைக்கப்பட்டது

(முறிகண்டி)

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பாலம் பொதுமக்களால் மீள சீராக்கப்பட்டது.

குறித்த பகுதியில் வாழ்கின்ற மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காக அமைக்கப்பட்ட பாலமானது கடந்த வெள்ள அனர்த்தத்தின் போது அடித்துச் செல்லப்பட்டது.

இதனால் பொதுமக்கள் போக்குவரத்துச் சீரின்மையால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த பாலத்தினை சீர்செய்யும் நடவடிக்கையில் பிரதேச இளைஞர்கள் மற்றும் மக்கள் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

பாலத்தினூடான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் பல சிரமத்தின் மத்தியில் குறித்த பாலம் சீரமைக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பகுதி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அப்பகுதியில் நிரந்தரமான பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-100)



# சிரமதானப் பணியில் ஈடுபட்ட வவு.சமுர்த்தி உத்தியோகத்தர்கள்



(நெளுக்குளம்)

டெங்கு நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் துப்புரவுப்பணியை முன்னெடுத்திருந்தனர்.


வவுனியாவில் பெருகிவரும் டெங்கு நோய் தடுப்பு மற்றும் தாய்நாட்டை காப்போம் என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் சுகாதாரம் மற்றும் சுத்தம் தொடர்பான செயற்றிட்டத்தினை வவுனியாவில் முன்னெடுத்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வவுனியா புதிய பேருந்து நிலையப்பகுதி மற்றும் ஏ9 வீதியில் தேங்கிக்கிடந்த குப்பைகளை பொறுக்கி எடுத்து தூய்மைப்படுத்தினர்.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் மற்றும் வவுனியா பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்களின் தலைமைப்பீட அதிகாரி உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (9-299)

# பாரதம்

## தொழிற்சாலையில் தீ 43 பேர் உயிரிழப்பு !

### மீட்புப் பணிகள் தீவிரம்



(டில்லி)
டில்லியில் அனாஜ் தானிய மண்டியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி, 43 பேர் உயிரிழந்நதனர்.

இந்நிலையில் விபந்தில் சிக்கியுள்ள ஏனையோரை மீட்கும் பணிகளில் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

டில்லியிலுள்ள ஜான்சி ராணி வீதியிலுள்ள தொழிற்சாலை யொன்றிலேயே நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

இதன்போது சம்பவம் அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர், பல மணி நேரம் போராடி தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ள மருத்துவ குழுவினர், படுகாயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். (ஜ-2)

## ஹிஸ்புல்முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த முக்கிய தீவிரவாதி சரணடைவு

(காஷ்மீர்)
ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த முக்கிய தீவிரவாதி சரணடைந்தார்.

புல்வாமா மாவட்டத்தில் ப்ராவ் பந்தினா என்ற இடத்தில் பாதுகாப்புப் படையினர் திடீர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போதே ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த முஸாபர் அகமது வானி என்ற தீவிரவாதி பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தார்.

பாதுகாப்புப் படையினருடன் கடந்த மாதம் நடந்த மோதலின் போது முக்கிய பங்கு வகித்தவர் முஸாபர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்தது.

இந்நிலையில் குறித்த தீவிரவாதியை இரகசிய இடத்திற்கு அழைத்துச் சென்று, மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜ-2)

## என்கவுண்டர் விவகாரம்; பழிக்குப்பழி நீதியல்ல

### உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சுட்டிக்காட்டு



(டில்லி)
பழிக்குப் பழி என்ற வகையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைத் தண்டிப்பது நீதியாக இருக்காதென உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஏ. போப்டே சுட்டிக்காட்டினார்.

தெலுங்கானா மாநிலத் தலைநகர் ஐதராபாத்தில் பெண் கால்நடை வைத்தியர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட 4 குற்றவாளிகளையும் மாநில பொலிஸார் சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பாகவே தலைமை நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜோத்பூரில் ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்துக்கான புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் பங்கேற்றபோது எஸ்.ஏ. போப்டே கூறியுள்ளதாவது.

"அனைத்து மக்களுக்கும் நீதி எளிதில் கிடைக்கும் வகையில் நீதித்துறையில் தற்போதுள்ள நடைமுறைகளை வலுப்படுத்த வேண்டும்.

பிரச்சினைகளுக்கு விரைவாகவும் குறைந்த செலவிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வு கிடைப்பதை நீதித்துறை உறுதி செய்ய வேண்டும்.

நீதித்துறையின் நடவடிக்கைகளில் அவ்வப்போது சுயபரிசோதனை மேற்கொண்டு மாற்றங்களைப் புகுத்த வேண்டும்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் விரைவாக நடைபெறுவதற்குத் தேவையான வழிமுறைகளை வகுப்பதோடு மட்டுமல்லாமல், அதற்குத் தடையாக விளங்கும் காரணிகளையும் கண்டறிந்து களைய வேண்டும்.

குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பான வழக்கின் விசாரணை, நீதிமன்றத்தில் தொடங்கப்படும் முன்பே, சமரசப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் சட்டங்களில் காணப்படுகின்றன.

இந்த நடைமுறையைக் கட்டாயமாக்க வேண்டியது அவசியமாக உள்ளது. சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தொடர்பாக பட்டப்படிப்போ, பட்டயப் படிப்போ காணப்படாதது ஏமாற்றமளிக்கிறது.

நாட்டில் முன்பு காணப்பட்ட விவாதப் பொருளானது தற்போது புதிய வீரியம் பெற்றுள்ளது. குற்றவியல் வழக்குகளில் விரைந்து நீதி வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது.

இந்த விவகாரத்தில் நீதித்துறை தன்னை மறுபரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.

அதேவேளையில், குற்ற நடவடிக்கைகளுக்கு உடனடியாக நீதி கிடைக்க வேண்டும் என்று எண்ணுதல் கூடாது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களை, பழிக்குப் பழி என்ற வகையில் தண்டிப்பது முறையான நீதியாக இருக்காது. அதுபோன்ற நடவடிக்கைகள், நீதிக்கான அடிப்படை சாராம்சங்களை இழக்கச் செய்து விடும்" எனத் தெரிவித்தார். (ஜ-2)

## ஈராக்கில் வலுக்கு...

## பொலிஸ் உட்பட 20...

(பக்தாத்)

**ஈராக்கில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மர்மநபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 3 பொலிஸார் உட்பட 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

ஈராக் நாட்டில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. வேலைவாய்ப்பு, ஊழலை ஒழித்தல், பொதுமக்கள் பாதுகாப்பு எனப் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி நாடு முழுவதும் பல முக்கிய நகரங்களில் பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டங்களில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது அந்நாட்டு பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டு வீசினர்.

தொடர்ந்து வன்முறை வெடித்ததால் நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்களைச் சுட்டு வீழ்த்தினர். அரசின் இந்த செயலுக்கு ஐ.நா.சபை கண்டனம் தெரிவித்தது.

இதையடுத்து அந்நாட்டுப் பிரதமர் அதெல் அப்துல் மஹதி பதவி விலகுவதாக அறிவித்தார். ஆனாலும் அங்கு போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

## டில்லியில் மீண்டும் கா...

(டில்லி)
தலைநகர் டில்லியில் காற்று மாசு அளவு மீண்டும் மோசமான நிலையை எட்டியுள்ளது.

கடந்த சில நாட்களாக காற்று மாசின் அளவு குறைந்திருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மீண்டும் அதிகரித்துள்ளது.

டில்லி பல்கலைக்கழகம், சாந்தினி சவுக், திர்பூர் உள்ளிட்ட தலைநகரின் பல பகுதிகளில் சராசரியாக, காற்று மாசு



## அரசிற்கு எதிரான போரா...

## பிரான்ஸ் தொழிற்சா...

(பாரிஸ்)
பிரான்ஸில் இடம்பெற்ற அரசாங்கத்திற்கெதிரான போராட்ட பயணத்தில், குழப்பம் விளைவிக்கப்பட்டதால் மீண்டும் போராட்டம் நடத்துவதற்கு பிரான்ஸ் தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்தன.

இதன்படி, நாளை செவ்வாய்க்கிழமை தேசிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க தொழிற்சங்கங்கள் தீர்மானித்தன.

பிரான்ஸ் நாட்டில் அரசின் ஓய்வூதிய திட்டச் சீர்திருத்தத்தை எதிர்த்து கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் 8 இலட்சம் ஊழியர்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர்.

இதில் ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், பொலிஸார், விமான நிலைய ஊழியர்கள் எனப் பல்வேறு தரப்பினர் வீதிகளில் இறங்




கிப் போராடினர்.

இந்த போராட்டத்தினால், ரயில்வே, மெட்ரோ நிலையங்கள், விமான நிலையங்கள் என பல பொது இடங்கள் ஸ்தம்பித்து போயிருந்தன.

# வெளிநாடு

## க்கும் போராட்டம்


## 20 பேர் உயிரிழப்பு



இந்நிலையில், தலைநகர் பக்தாத்தில் நேற்றுப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத மர்ம மனிதர்கள் உள்ளே புகுந்து துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் குத்தியும் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர்.

இதிலேயே பொலிஸ் உட்பட 20 பேர் பரிதாபமாகப் பலியாகினர். (ஐ-2)

## காற்று மாசு அதிகரிப்பு



370 என்ற அளவில் அதிகரித்தது.

இதன் காரணமாக டில்லிவாழ் பொதுமக்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

கடுங்குளிருடன் கூடிய பனிமூட்டமும், சாதகமான காற்று வீசாததாலும், காற்று மாசு மீண்டும் அதிகரித்திருப்பதாக மத்திய காற்றுத் தரம் மற்றும் வானிலை முன்னறிவிப்பு ஆய்வு மையம் விளக்கமளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ராட்டப் பயணம் தொடரும்

## சங்கங்கள் அழைப்பு




இதேவேளை, இப்போராட்டம் வன்முறையாக மாற பொலிஸார் மற்றும் போராட்டக்காரர்களுக்கிடையில் மோதல் வெடித்தது. இதில் பலர் காயமும் அடைந்தனர்.

இந்நிலையில் இந்த குழப்பமான நிலையை முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்தனர்.

பிரான்ஸில் பல்வேறு புதிய விதிமுறைகளை ஓய்வூதிய திட்டத்துக்குள் கொண்டுவந்ததால், தற்போது ஊழியர்களிடையே பெரும் நம்பிக்கையின்மை எழுந்துள்ளது.

ஓய்வூதிய வயது வரம்பு 62 இல் இருந்து 64 ஆக உயர்த்தப்பட்டது.

தவிர, சேவைக்காலத்தைப் பொறுத்து ஓய்வூதியத்தின் தொகை மாறுபடும். ஓய்வூதியத்தை 64 வயதுக்கு முன்னதாக கோரினால் ஓவ்வூதிய தொகை வேறுபடும் என பல புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ஈரானில் 1000 பேர் வரை பலியாகி இருக்கலாம்

### அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஈரானில் நடந்த போராட்டத்தில் சுமார் 1000 பேர் வரை பலியாகி இருக்கலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்கா தரப்பில், "ஈரானில் அண்மையில் நடந்த வன்முறையில் சுமார் 1000 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம். மேலும் கைது செய்தவர்கள் சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதன் காரணமாக ஈரான் மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதிக்கலாம் என்றும் ஈரானுக்கான அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதி பிரைன் ஹூக் தெரிவித்தார்.

ஈரானில் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலை கடந்த மாதம் 50 சதவீதம் உயர்த்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்த விலை உயர்வு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஈரான் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் எரிபொருள் விலையுயர்வுக்கு எதிராக நாடு முழுவதும் கலவரங்கள் வெடித்தன. பலர் கொல்லப்பட்டனர். ஆனால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஈரான் அரசு வெளியிடாமல் இருந்து வந்தது.

இதற்கிடையில், போராட்டக்காரர்களுக்கு எதிராக ஈரான் பாதுகாப்புப் படைகள் நடத்திய தாக்குதலில் 100 இற்கும் அதிகமானவர்கள் இறந்திருக்கலாம் என்று ஆம்னெஸ்டி தெரிவித்திருந்தது.

ஆனால், இதற்கு ஈரான் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்தக் கலவரங்களின் பின்னணியில் அமெரிக்கா உள்ளதாக ஈரான் குற்றம் சுமத்தியது.

இந்நிலையில் ஈரான் போராட்டத்தில் சுமார் 1000 பேர் வரை இறந்திருக்கலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)


## இந்தியாவின் அரிய ஓவியம் இங்கிலாந்து கலைக்கூடத்தில்

(லண்டன்)

இந்தியா குறித்த அரிய ஓவியம் ஒன்று இங்கிலாந்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கிந்திய நிறுவனத்தினர் இந்தியாவில் இருந்த போது மறைக்கப்பட்டவர்கள் என்ற தலைப்பில் வரையப்பட்டுள்ள ஓவியம் ஒன்றே இவ்வாறு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஓவியம் இந்திய, இஸ்லாமிய மற்றும் ஐரோப்பிய பாணி கலந்து வரையப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



18 அல்லது 19 ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டுள்ளதாகக் கருதப்படும் இந்த ஓவியம் லண்டனில் உள்ள கலைக்கூடம் ஒன்றில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

## சீரற்ற காலநிலையால் 12 பேர் உயிரிழப்பு



(அடிஸ்அபாமா)

உகண்டாவில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான உகண்டாவில் தற்போது பருவமழை காலம் என்பதால் பல்வேறு நகரங்களில் கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் பண்டிபுஹ்யா மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் பலர் அடித்து செல்லப்பட்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த 12 பேரின் உடல்களை கண்டெடுத்தனர்.

மேலும், சிலர் இந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருப்பதால் அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த வெள்ளத்தில் பல வீடுகள் சேதமடைந்ததுடன், வீதிகள் உள்ளிட்ட பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன. (ஐ-2)

## யுரேனியத்தின் செறிவை உயர்த்துவதற்கான எதிர்காலத் திட்டம் விரைவில் - ஈரான்

(டெஹ்ரான்)

யுரேனியத்தின் செறிவூட்டும் அளவை உயர்த்துவதற்கான தங்கள் எதிர்கால நடவடிக்கை தொடர்பாக விரைவில் அறிவிப்போம் என ஈரான் தெரிவித்தது.

இந்த விடயம் தொடர்பாக அந்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை கருத்துத் தெரிவித்த ஈரானின் அணுசக்தி அமைப்பின் துணைத் தலைவர் அலி அஸ்கர் ஜாரியன், "எதிர்காலத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு புதிய தலைமுறை இயந்திரங்களை நாங்கள் வெளியிடுவோம் எனத் தெரிவித்தார்.

2015 அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியதையடுத்து யுரேனியத்தின் செறிவூட்டும் அளவை விரைவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக கடந்த செப்டெம்பர் மாதம் ஈரான் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது பற்றி பேசும் அரசியல் சூழல் தற்போதில்லை

## சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப்பது பற்றி பேசக்கூடிய அரசியல் சூழ்நிலை தற்போது இல்லாமல் போயுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக் காட்டினார்.**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் தேசிய பாதுகாப்பு தொடர்பான பேச்சு வார்த்தை மேல் எழுந்ததால் இந்த நிலைமை உருவாகியதாகவும் அவர் விளக்கமளித்தார்.



இதனால், தலையில் பிரச்சினை இருக்கும் ஒருவருக்கு மாத்திரமே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப்பது குறித்து பொதுத் தேர்தலில் பேச முடியும்.

எது எப்படி இருந்தபோதிலும் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட ஜனநாயக சுயாதீன ஆணைக்குழுக்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நாட்டின் பாதுகாப்பினை உறுதி செய்யக்கூடிய தலைவர் கோட்டாபயவே - குசலதம்ம தேரர்

(கொழும்பு)

நாட்டுக்கு எதிரான அனைத்து சவால்களையும் வெற்றிகொண்டு தாய்நாட்டின் பாதுகாப்பினை உறுதி செய்யக்கூடிய தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளதாக வித்தியாலங்கார பிரிவெனாதிபதி கலாநிதி வெலமிட்டியாவே குசலதம்ம தேரர் தெரிவித்தார்.

களனி வித்தியாலங்கார விகாரைக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்ற ஜனாதிபதி அங்கு சமய வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் தேரரைச் சந்தித்து ஆசி பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்பின்னர் களனி ரஜமகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார்.

விகாராதிபதி கொள்ளுப்பிட்டிய மகிந்த சங்கரக்கித தேரர் மற்றும் பெங்கமுவே நாலக தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் இதன்போது ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர். (இ-7)

# மட்டக்களப்பில் மழை தொடர்கிறது 15 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழை, வெள்ளத்தால் சுமார் 15 ஆயிரத்து 19 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சுமார் 64 குடும்பங்கள் இடைத்தங்கல் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மாவட்டச் செயலாளர் மா. உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகள் குறித்து ஆராயும் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்களுக்கும் கிரமமான நிவாரண உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வழங்கப்படவிருக்கின்ற நிவாரண உலர் உணவுப் பொருட்கள் தரமானதாகவும் சிறந்ததாகவும் இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்துகொள்ள வேண்டும் என்றும் அவர் பணிப்புரை விடுத்தார்.

மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 12 இடைத்தங்கல் முகாம்களில் தற்போது வரை 64 குடும்பங்களைச் சேர்ந்த 1915 பேர் தங்கியுள்ளனர்.

அதேவேளை மாவட்டத்தின் 12 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து 15 ஆயிரத்து 19 குடும்பங்களைச் சேர்ந்த 51 ஆயிரத்து 433 பேர் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் தகவல் வெளியிட்டார். (இ-7)

# அங்கொட லொக்காவின் சகா கேரளக் கஞ்சாவுடன் கைது

(கொழும்பு)

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வரும் அங்கொட லொக்காவின் சகா ஒருவர் ஒரு கிலோ 35 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பிலேயே இவ்வாறு கேரளக் கஞ்சாவுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அத்தோடு குறித்த நபர் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் போதைப்பொருள் வர்த்தகர் எனப் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்தது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எழுத்துச் சாத்திரம்

ஒருத்தன் எழுதுகிற எழுத்தைப் பார்த்துவிட்டு அந்த ஆள் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதை யூகிக்க முடியுமா? முடியும் என்று சொல்கிறார்கள். அதுதான் எழுத்து சாஸ்திரம்.

இப்பவும் மேல் கார்டுகளிலே சில பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்தால் இந்த வேலைக்கு விண்ணப்பம் போடுறவங்க தங்களுடைய சொந்தக் கையெழுத்திலே மனுவை எழுதி அனுப்ப வேண்டும் என்று இருக்குமாம். இது எதுக்கு என்று நினைக்கிறீர்கள். பல பெரிய கம்பனிக்கு எழுத்து சாஸ்திரத்திலே நம்பிக்கை இருக்கிறது தான் இதுக்குக் காரணம்.

இன்றைக்கும் லண்டனிலே உள்ள பெரிய சாஸ்திர நிபுணர்களை கூப்பிட்டு மனுதாரர்களுடைய கையெழுத்தைக் காட்டறது உண்டாம். எழுத்துக்கு மதிப்பெண் போடச் சொல்வாங்களாம் நிறைய விண்ணப்பம் வருகிறபோது அதை வடி கட்டுறதுக்கு இந்தமுறையை உபயோகப்படுத்துவதும் உண்டாம். பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, செக்கோஸ்லாவாகியா, இஸ்ரேல் இங்கயெல்லாம் இந்தக் கலையிலே தேர்ச்சி பெற்ற நிபுணர்களுக்கு ஏகப்பட்ட கிராக்கியாம். அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்குதாம். ஒரு ஊழியர் நேர்மையானவரா? இல்லையா? பணம் புழங்குகிற இடத்திலே அவருக்கு வேலை கொடுக்கலாமா? கூடாதா? விசுவாசமான ஊழியரா? பொய் சொல்லுவாரா? என்பதை எல்லாம் எழுத்தைப் பார்த்து முடிவு செய்திருக்கிறார்களாம்.

இத்தாலியிலேயே 17வது நூற்றாண்டிலே இந்தக் கலை ஆரம்பமாயிருக்கு. 1871 வரைக்கும் இது ஒன்றும் அவ்வளவு பிரபல்யமாகவில்லையாம். பிரெஞ்சுப் பாதிரியார் ஒருவர் 1871 இலே பிரெஞ்சு எழுத்து சாஸ்திரம் சங்கத்தினை நிறுவினாராம். அதுக்கப்புறம் இது கொஞ்சம் கொஞ்சமாகப் பரவ ஆரம்பித்து இருக்கு. இன்றைக்கு உலகத்திலே மிகப்பெரிய எழுத்துக் கலைக் கழகம் இஸ்ரேல் டெல் அவீவ் நகரத்திலே இருக்கு.

அதனுடைய கிளை லண்டனிலே இருக்காம். இஸ்ரேலில் சில சமயம் நீதிமன்றங்கள் கூட எழுத்து சாஸ்திர அறிஞர்களின் அறிக்கையை ஏற்றுக் கொள்கிறார்களாம்.குற்றவாளிகள் உண்மையிலே குற்றம் இழைக்கக்கூடியவர் தான் என்பதை அவர் எழுதின எழுத்தின் வடிவத்தை வைத்துக் கண்டு பிடித்து விடுகிறார்களாம் சேர். எழுத்து சாஸ்திரம் சம்பந்தமாக கடந்த 200 வருஷங்களிலேயே ஏராளமான நூல்கள் வந்திருக்கிறதாம். சில பல்கலைக்கழகங்கலே இதைப் பாடமாக கூட வைத்திருக்கிறார்களாம்.

இந்தக் கலையே நூற்றுக்கு நூறு துல்லியமானது என்று சொல்ல முடியாது. இதை விஞ்ஞான ரீதியிலே நிரூபிக்க முறையான ஆராய்ச்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை. ஆனாலும் ஒருவர் எழுதுகிற எழுத்தின் வடிவத்தை வைத்துஅவருடைய மனநிலையை ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடியும் என்பது உண்மை. உளவியல் நிபுணர்கள் இதை ஒத்துக் கொள்கிறார்கள்.

ஒருவருடைய பெர்சனாலிட்டியை கண்டுபிடிக்க இது ரொம்ப உதவி. கோடு போடாத வெள்ளைத் தாளிலே ஒரு போல்பாயின்ட் பேனாவாலே ஒரு 20 வரி எழுதிக் கொடுத்தால்போதும் நீங்க எப்படிப்பட்டவர்கள் என்று சொல்கிற நிபுணர்கள் பலபேர் இருக்கிறார்கள். ஆங்கில எழுத்தை அடிப்படையாக வைத்து விளக்கம் கொடுக்கிறார்களாம். இருந்தாலும் பிற மொழிகளிலே எழுதுகிறவர்களின் குணநலன்களைக் கண்டுபிடிப்பதற்கும் பொதுவான விதிமுறைகள் இருக்கிறதாம். ஒருவர் பெரிதாக இடைவெளி விட்டு எழுதினால் அவர் பரந்த நோக்கம் உள்ளவர்.

சின்னதா நெருக்கமாக எழுதினால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளவர் ஒருதாளில் இருபக்கமும் மார்ஜின் விட்டு எழுதுகிறவர்கள் கலை நோக்கு உள்ளவர்களாகவும் எதிலேயும் பட்டும் படாமல் இருக்கிற சுபாவம் உள்ளவர்களாகவும் இருப்பார்களாம். ஆங்கில எழுத்துக்களிலே I,T,F மாதிரியான எழுத்துக்களை அளவுக்கு அதிகமாக மேல்புறம் நீட்டி எழுதுகிறவங்க குறிக்கோள் உள்ளவர்களாம். குறைவான மார்ஜின் விட்டு எழுதுகிறவர்கள் சிக்கனமான பேர்வழிகள்.

இஸ்ரேலிலே Graphology Institute நிறுவன திருமதி அன்னா கொரன் இதையெல்லாம் சொல்லுகிறார்கள். ஆகக் கூடிய நம்ம கையெழுத்தே நம்மளைக் காட்டிக் கொடுத்துவிடும் போல இருக்கு சேர் . அது இருக்கட்டும். சில டாக்டர்கள் மருந்து சீட்டு எழுதிக் கொடுக்கிறார்களே அதை உங்களாலே படிக்க முடியுமா? அதைப் படிக்கிறதுக்குத் தனிச் சாமர்தியம் வேண்டும். சில பேராலே தான் அது முடியும். அவர் எழுதிக் கொடுக்கிற சீட்டை கம்பவுண்டர் கிட்டே கொண்டு போய் கொடுங்கள்.

அவர் அதைக் கரெக்டராகப் படித்து புரிந்து கொண்டு போத்தலில் மருந்து கலந்து கொடுத்துவிடுவார். அந்த எழுத்து நமக்குப் புரியாது. ஒரு ஆளு கையிலே ஒரு விலாசச் சீட்டை வைத்துக் கொண்டு வீடு எங்கே இருக்கிறது என்று அட்ரஸ் தேடிக் கொண்டு இருந்தார். அந்தச் சீட்டிலே விலாசம் எழுதிக் கொடுத்தவர் ஏதோ அவசரத்திலே கிறுக்கிக் கொடுத்து இருக்கிறார். ஒன்றும் புரியவில்லை. வழியிலே போகிறவர்கள் எல்லோரிடமும் சீட்டைக் காட்டி விசாரிக்கிறார். வாங்கிப் பார்க்கிறவர்கள் எல்லாம் எழுத்துப் புரியாமல் போய்விடுகிறார்கள். இந்த ஆள் யோசித்தார். அங்கேயும் இங்கேயும் பார்த்தார் ஒரு சின்ன ஆஸ்பத்திரி கண்ணிலே பட்டது.

புத்திசாலித்தனமாக நேராக அங்கே போனார். கம்பவுண்டரைத் தேடிப் பிடித்தார். டாக்டர் எழுத்தையே புரிந்து கொள்கிறவராச்சே அவர். அதனாலே அவரு கையிலே சீட்டைக் கொடுத்தார். அவர் சீட்டை வாங்கி அப்படியும் இப்படியும் திருப்பி உற்றுப் பார்த்தார் அதுக்கப்புறம் இவரைப் பார்த்து போத்தல் கொண்டு வந்து இருக்கிறீங்களா? என்றாராம்.

# தாக்குதல்களுடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்பா? விசாரணைகளின் அடிப்படையிலேயே தெரியவரும்

# ஜனாதிபதி ஆணைக்குழு மீது பூரண நம்பிக்கை உண்டு!



## கர்தினால் மல்கம் ரஞ்சித் சாட்சியம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களில் அரசியல்வாதிகள் தொடர்புபட்டுள்ளனரா? என்பது தொடர்பாக ஆணைக்குழுவின் விசாரணைகளின் அடிப்படையிலேயே தெரியவரும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக அவர் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகச் சாட்சி வழங்கினார்.

சுமார் 3 மணி நேர சாட்சி வழங்கலின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக எனது பக்கம் சார்ந்த கருத்துக்களை முன்வைத்தேன். குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து நாம் வழங்கும் சாட்சியங்களின் அடிப்படையில் ஆணைக்குழு ஏனையவர்களிடம் விசாரணை செய்து அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்.

இந்தச் சம்பவத்தில் அரசியல்வாதிகள் தொடர்புபட்டுள்ளனரா? என்பது தொடர்பாக ஆணைக்குழுவின் விசாரணைகளின் அடிப்படையிலேயே தெரியவரும். ஆணைக்குழுவானது சிறந்த முறையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

பக்கச்சார்பான ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எமக்கு உடன்பாடில்லை. அதனையே ஜனாதிபதியும் வலியுறுத்தினார். ஆகவே இந்த ஆணைக்குழு மீது எமக்குப் பூரண நம்பிக்கை உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர் ஐயாத்துரை லோகஞானம் அண்மையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் அகில இலங்கைச் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (இ-7)

# எரிபொருள் விலைச்சூத்திரம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை

## நிதியமைச்சு விளக்கம்

(கொழும்பு)

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்தை செயற்படுத்தவோ, அல்லது இரத்துச் செய்வதற்கோ இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என நிதியமைச்சு தெரிவித்தது.

அத்துடன் இந்த விவகாரம் குறித்து எதிர்காலத்தில் கலந்துரையாடல் இடம்பெற்று இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

எரிபொருள் விலைச் சூத்திரம் 2019 ஆம் ஆண்டு மே மாதம் கடந்த அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப்பட்டது.

இதன்மூலம் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு, குறைப்பு என்பவற்றுக்கேற்ப மாதாந்தம் 10 ஆம் திகதி இலங்கையில் எரிபொருளில் விலை மாற்றம் செய்யப்பட்டு வந்தது.

எனினும் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர், கடந்த அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் விலைச் சூத்திரத்தை இரத்துச் செய்வதற்கு எதிர்பார்ப்பதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிவனொளிபாத யாத்திரை பருவகாலம் ஆரம்பம்; யாத்திரிகர்களுக்கான விதிமுறைகள் அறிவிப்பு

(ஹற்றன்)


சிவனொளிபாத மலைக்கான யாத்திரை பருவகாலம் நாளை மறுதினம் 11 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்நிலையில் சூழல் மாசு கருதி நல்லதண்ணி வர்த்தக சங்கம் பல விதிமுறைகளை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதனையடுத்து யாத்திரிகர்களுக்கு பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டது.

இதற்கு மாற்றீடாக யாத்திரிகர்களுக்கென இலவசமாக பயணப்பையை வழங்குவதுடன், பயண முடிவில் அந்தப் பையைத் திரும்பக் கொடுத்துச் செல்லவும் இச்சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இரவு நேரங்களில் யாத்திரிகர்கள் செல்லும் வழியில் மின்சார வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும், பாதுகாப்புக்கருதி சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தவும் புகையிரத மார்க்கமாக வருகை தரும் யாத்திரிகர்களின் நலன்கருதி ஹற்றன் புகையிரத நிலையத்திலிருந்து நல்லதண்ணி நகரம் வரை விசேட பேருந்து சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லதண்ணி மலையடிவாரத்தில் அமைக்கப்படவுள்ள பொலிஸ் நிலையத்திற்கு மேலதிகமாக சீத்தக்குவ, ஊசி மலையுச்சி முதலிய இடங்களிலும் தற்காலிக பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.



சிவனொளிபாதமலை யாத்திரையின் ஆரம்பமானது இன்று 9 ஆம் திகதி பெல்மதுமளை கல்பொத்தாவெல ரஜமகா விகாரையில் வழிபாடுகளுடன் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து, நாளை மறுதினம் 11 ஆம் திகதி பூஜை வழிபாட்டுப் பொருட்களும் பெல்மதுளை ரஜமகா விகாரையிலிருந்து விக்கிரகங்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளன.

ஆறு மாதங்கள் தொடரவுள்ள சிவனொளிபாதமலை யாத்திரை பருவகாலம் 2020 ஆம் ஆண்டு மே மாதம் வெசாக் போயா தினத்துடன் நிறைவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இரு நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நடராசா சிறிரஞ்சனின் "யாழ்ப்பாணத் தமிழ் அகராதி", "யாழ்ப்பாண வழக்குச் சொல் அகராதி தொகுதி - 1" ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை பேராசிரியர் சுபதினி ரமேஸ் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வேந்தர், பேராசிரியர் சி.பத்மநாதன், சிறப்பு விருந்தினராக தமிழ் நாடு பெரியார் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் பெ.மாதையன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-2)

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவின்றி தலைமையை நாம் தெரிவுசெய்வோம்

## அஜித் பீ.பெரேரா கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைமைத்துவம் அவசியமாகின்றது என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடயமாகும்.

ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் போன்றவற்றை கட்சி பிளவுபடாமல் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெரிவு செய்ததைப் போன்று எதிர்வரும் தினங்களில் புதிய தலைமைத்துவமும் தெரிவு செய்யப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ.பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைமைத்துவம் தேவைப்படுவதாக அக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தெரிவிக்கும் அதேவேளை, இதனால் கட்சிக்குள் பிளவு ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கும் போதே அஜித் பீ. பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்கும் விடயத்தில் முரண்பாடுகள் ஏற்பட்டு கட்சி பிளவடையும் என்று பலரும் கூறினார்கள்.



எனினும் புதிய ஜனநாயக முன்னணி என்ற புதிய கூட்டணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸ அனைவரதும் இணக்கத்துடன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் யார் என்று தெரிவு செய்யும் போதும் இதே போன்று கட்சி பிளவுபடும் என்று சிலர் எதிர்பார்த்தனர்.

எனினும் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. எவ்வித பிரச்சினையும் இன்றி சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித்தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சிக்கு புதிய தலைமைத்துவம் அவசியமாகிறது என்பதை யாராக இருந்தாலும் ஏற்றுக் கொள்வார்கள்.

அந்த புதிய தலைவர் யார் என்பதை எதிர்வரும் ஓரிரு தினங்களில் கலந்துரையாடி தீர்க்கமான முடிவொன்றை எடுப்போம் என மேலும் தெரிவித்தார். (ஜ)

# நல்லாட்சி

நல்லாட்சி என்பது மக்கள் நலன் பேணும் நல்ல அரசினை குறிக்கின்றது. ஜனநாயகத்தின் பண்புகளின் மறு வடிவமாகவும் ஜனநாயகத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கருவியாகவும் நல்லாட்சி கோட்பாடானது அடையாளப்படுத்தப்படுகின்றது. நல்லாட்சி பற்றிய பிளேட்டோவின் கருத்தாடல்களில் 'அறிவுடையோர்கள் பொதுநலனை நோக்காகக் கொண்டு ஆட்சி நடத்தும் போது ஆளப்படும் சமூகத்தில் நல்லாட்சி நிலவும்' எனவும் Thomes G.Weiss குறிப்பிடும் போது 'யாதாயினும் ஒரு சமூகத்தில் வாழும் ஒட்டுமொத்த மக்களின் நம்பிக்கை விருப்பு, நட்புறவு ஒத்துழைப்பு ஆகியவற்றை அறிந்து கொண்டு முன்னெடுக்கப்படும் ஆட்சியாகவும் மேலும் ஒரு சமூகத்தால் அரசினால் அல்லது நிறுவனங்களினால் செயற்படுத்தப்படுவதாகவும் காணப்படும் ஆட்சிமுறையே நல்லாட்சி என வரைவிலக்கணப்படுத்துகின்றனர். மனிதன் சுதந்திரமாகவே பிறந்தான். எனினும் அவன் அடிமைத்தளையால் கட்டுண்டு கிடக்கிறான் என ரூசோ எனும் பிரான்சிய நாட்டு தத்துவஞானி குறிப்பிடுகின்றார்.

நல்லாட்சி என்பது தனிநபரின் மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாக்கும் நீதி மற்றும் சமாதானத்தில் நிறுவப்பட்ட ஒரு அமைப்பை உருவாக்க உறுதி பூண்டுள்ள அரசாங்கத்திற்கான அணுகுமுறையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி பங்கெடுத்தல், சட்டவாட்சி, வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, ஒருமித்த நோக்குநிலை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம், செயற்திறன் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய எட்டு காரணிகளால் நல்லாட்சி அளவிடப்படுகிறது.

## 1. பங்கெடுத்தல்

அனைத்து குழுக்களும் குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள், அரசாங்க அமைப்புகளுக்கு நேரடி அல்லது பிரதிநிதித்துவ அணுகலைக் கொண்டிருக்க வேண்டும். இது ஒரு வலுவான சிவில் சமூகமாகவும் மற்றும் கருத்து சுதந்திரத்துடன் குடிமக்களாகவும் வெளிப்படுகிறது.

## 2.சட்டவாட்சி

அனைத்து குடிமக்களின் குறிப்பாக சிறுபான்மையினரின் மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாக்கும் பக்கச்சார்பற்ற சட்ட அமைப்புக்களால் சட்டவாட்சி எடுத்துக்காட்டுகிறது. இது சுயாதீன நீதித்துறை மற்றும் ஊழல் இல்லா தகவல் துறையால் குறிக்கப்படுகிறது.

## 3.வெளிப்படைத்தன்மை

வெளிப்படைத்தன்மை என்பது குடிமக்கள் புரிந்து கொள்ளுதல் மற்றும் முடிவுகளை எடுக்கும் வழிமுறைகள் மற்றும் வழிமுறைகளை அணுகுவதைக் குறிக்கிறது. குறிப்பாக இதுபோன்ற முடிவுகளால் அவர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டால் இந்தத் தகவல் புரிந்து கொள்ளக்கூடிய மற்றும் அணுகக்கூடிய வடிவத்தில் வழங்கப்பட வேண்டும். பொதுவாக ஊடகங்கள் மூலம் மொழிபெயர்க்கப்படும்.

## 4.பொறுப்புணர்வு

பொறுப்புணர்வு என்பது நிறுவனங்கள் தங்கள் பங்குதாரர்களுக்கு ஒரு நியாயமான கால எல்லைக்குள் பதிலளிப்பதை உள்ளடக்குகிறது.

## 5.ஒருமித்த நோக்குநிலை

இது பலவிதமான தேவைகள் முன்னோக்குகள் மற்றும் குடிமகனின் எதிர்பார்ப்புகளுக்கு இடையே மத்தியஸ்தம் செய்ய முற்படுகிறது. சமூகத்தின் வரலாற்று. கலாசார மற்றும் சமூக சூழ்நிலை பற்றிய ஆழமான புரிதலைப் பிரதிபலிக்கும் வகையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

## 6. சமபங்கு மற்றும் உள்ளடக்கம்


ஒரு சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் நல்வாழ்வை மேம்படுத்த அல்லது பராமரிக்க அதிகாரம் பெற்றிருப்பதை உறுதி செய்வதைப் பொறுத்தது. குறிப்பாக அந்த நபர்கள் மற்றும் குழுக்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவை.

## 7.செயற்திறன்

ஒரு சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வளங்களின் நிலையான பயன்பாட்டின் மூலம் செயற்திறன் உருவாக்கப்படுகிறது. நிலையான தன்மை என்பது சமூக முதலீடுகளை உறுதி செய்வதையும் குறிக்கிறது.

## 8.பொறுப்புக்கூறல்

நிறுவனங்கள் இறுதியில் மக்களுக்கு பொறுப்புக் கூறப்படுவதைக் குறிக்கிறது. இதில் அரச நிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை அனைத்தும் ஒருவருக்கொருவர் பொறுப்புக்கூற வேண்டும். ஆள்வோரும் ஆளப்படுவோரும் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளின் நிமித்தம் பொறுப்புக்கூறுவோராயமைய வேண்டும் என்பதும் நல்லாட்சியின் முக்கிய பண்பாகும்.



பொதுவாக, உலக வங்கி மற்றும் பிற பன்முக மேம்பாட்டு வங்கிகளின் நல்லாட்சி குறித்த பணிகள் பொருளாதார நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிர்வாகத்தை உரையாற்றுகின்றன. இதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல், ஒழுங்குமுறை சீர்திருத்தம் மற்றும் தலைமை ஆகியவை அடங்கும். ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஆணையம் போன்றனவும் ஜனநாயக ஆட்சி மற்றும் மனித உரிமைகளை முன்னிலைப்படுத்த அதிக வாய்ப்புள்ளது.

நன்கு நிர்வகிக்கப்படும் நாடுகள் பெரும்பாலும் தாராளமய ஜனநாயக நாடுகள் செயற்படுவதைப் போலவே இருக்கின்றன. நல்லாட்சி என்பதற்கு முழுமையான வரையறை இல்லை. இந்த சொல் மிகுந்த நெகிழ்வுத்தன்மையுடன் பயன்படுத்தப்படுகிறது.

எவ்வாறாயினும் நல்லாட்சி என்பது அரசியல் மற்றும் நிறுவன செயல்முறைகள் மற்றும் வளர்ச்சியின் குறிக்கோள்களை அடைவதற்கு அவசியமானதாகக் கருதப்படும் விளைவுகளுடன் தொடர்புடையது என்பதில் குறிப்பிடத்தக்க அளவிலான ஒருமித்த கருத்துள்ளது.

ஒரு மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் நல்லாட்சி என்ற கருத்தை முக்கிய சர்வதேச மனித உரிமைகளுடன் இணைக்க முடியும். நல்லாட்சி என்பது ஒரு இலட்சியமாகும், இது அதன் முழுமையை அடைவது கடினம். ஆளுகை என்பது பொதுவாக அவர்களின் எண்ணங்கள், அனுபவங்கள் விருப்பத்தேர்வுகள் மற்றும் பிற மனித பலங்கள் மற்றும் குறைபாடுகளை கொள்கை வகுக்கும் அட்டவணையில் கொண்டு வரும் நல்ல எண்ணம் கொண்டவர்களை உள்ளடக்கியது.

அனைத்து மட்டங்களிலும் நல்லாட்சி என்பது பொருளாதார வளர்ச்சி, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு அடிப்படை ஆகும். ஊழல் மற்றும் பண மோசடி உள்ளிட்ட பலவீனமான நிர்வாகத்தின் பல அம்சங்களைச் சமாளிக்கவும் சட்டவாட்சியின் முழு மரியாதையை ஊக்குவிக்கவும், வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும் OSCE செயற்படுகிறது. OCEEA மற்றும் பல OSCE கள் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் நல்லாட்சியை தங்கள் பணியின் முன்னுரிமையாக மாற்ற முயற்சி செய்கின்றன.

அரசாங்கம், தனியார் துறை மற்றும் சிவில் சமூகங்களிடையே பல பங்குதாரர்களின் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வை அதிகரிக்கும் பிரசாரங்கள் உள்ளிட்ட இலக்கு தொழில்நுட்ப மற்றும் திறன் மேம்பாட்டு ஆதரவை வழங்குதல். நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல், ஊழல், பணம் ஆகியவற்றிற்கு எதிரான அதிகாரிகளின் முயற்சிகளை ஆதரித்தல் ஊழல் தடுப்பு உத்திகள் செயற்திட்டங்கள் மற்றும் அமைப்புக்களை உருவாக்குவதை ஆதரித்தல்.

பொதுவாக, நல்லாட்சி என்பது நிர்வாக சட்டத்தின் ஒரு நெறிமுறைக் கொள்கையாகக் கருதப்படுகிறது. மனித உரிமைகளை மேம்படுத்துவதையும் உறுதி செய்வதில் ஆணைக்குழு முக்கியமானது. ஆனால் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இரண்டையும் உறுதி செய்வதிலும், நல்லாட்சிக்கு பல்வேறு அரச நிறுவனங்களிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்திறன் தேவையாகும்.

அரசியல் மட்டத்தில் கொள்கை வகுத்தல் மற்றும் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட ஜனநாயக நடைமுறைகள் நல்லாட்சியின் முக்கிய அம்சங்களாகும்.

ஜனநாயகமாக தகுதிபெற, தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் இருக்க வேண்டும். நல்லாட்சியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொள்ள நாம் முதலில் 'ஆளுகை' என்ற வார்த்தையை வரையறுக்க வேண்டும். கேம்பிரிட்ஜ் அகராதி இதை நிறுவனங்கள் அல்லது நாடுகள் மிக உயர்ந்த மட்டத்தில் நிர்வகிக்கும் விதம் என்று குறிப்பிடுகிறது.

ஆளுகை என்பது நிறுவனத்தின் மிக உயர்ந்த மட்டத்திலிருந்து விநியோகிக்கப்படுகிறது மற்றும் அமைப்புகள் வழியாக நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், செயல் முறைகளின் சீரான தன்மையால் நல்லாட்சி அடையப்படலாம்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையான ஒரு தேவை நல்லாட்சி ஆகும். எவ்வளவு வளம் இருந்தும் நல்லாட்சி இல்லாவிடில் அந்த வளங்கள் வீணடிக்கப்படும், நல்வாழ்வு நாட்டின் அனைத்துக்குடி மக்களுக்கும் கிட்டாது. நல்லாட்சியினை கட்டியெழுப்புதல் இலங்கையின் நிலையான சமாதானத்திற்கு இது அவசியமானதாகவும் காணப்படுகின்றது. நாட்டில் சமத்துவத்தை ஏற்படுத்தல் மற்றும் இன ஐக்கியத்திற்கான நிகழ்ச்சி திட்டத்தினை மேற்கொள்ளுதல் போன்றன அவசியமானதாக உள்ளது.

ஆரணி விஜயகுமார்
மூன்றாம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# அழகு ராணியான இலங்கைப்பெண் ஜனாதிபதி கோட்டாபய வாழ்த்து




(கொழும்பு)

திருமணமானவர்களுக்கான உலக அழகு ராணிப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த பெண் அழகு ராணியாக முடி சூட்டப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்தார்.

கொழும்பைச் சேர்ந்த கரோலினி என்பவரே திருமணமானவர்களுக்கான உலக அழகு ராணி போட்டியில் வெற்றி பெற்றார்.

அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் நடைபெற்ற உலக ராணி 2020 போட்டியிலேயே அவர் இந்தப் பட்டத்தை வென்றார்.

35 வருடங்களின் பின்னர் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் இந்தப் பட்டத்தை வென்ற சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்நிலையில் குறித்த பெண்ணுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்தார். இது குறித்து பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள அவர் **"MRS WORLD 2020"** என முடிசூட்டப்பட்ட திருமதி. கரோலினி ஜூரிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

35 வருடங்களின் பின் நமது நாட்டின் சர்வதேச பட்டத்தை மீண்டும் கொண்டு வந்து இலங்கையர்கள் அனைவரையும் பெருமைப்பட வைத்த உங்களுக்கு எனது நன்றிகள் எனத் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் யுவான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் எதிர்கால அரசியல் பயணத்துக்கு வாழ்த்து



(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் யுவான் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடினார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எதிர்கால அரசியல் பயணத்துக்கு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது. (ஜ)

# புதிய இராணுவப் பேச்சாளர் நியமனம்

(கொழும்பு)

இராணுவத்தின் புதிய பேச்சாளராக பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது இராணுவப் பேச்சாளராக மேஜர் ஜெனரல் சுமித் அத்தப்பத்து செயற்பட்டு வந்த நிலையில் இராணுவத்தின் புதிய பேச்சாளர் நியமிக்கப்பட்ட பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்கவுக்கு நியமனக் கடிதம் தற்போது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)



# அச்சமும் சந்தேகமும் இன்றி நிம்மதியாக வாழக்கூடிய சூழல் நாட்டில் உருவாக வேண்டும்

## ஜனாதிபதி முன் அநுருத்த தேரர் வெளிப்படுத்தல்

(கொழும்பு)

சட்டத்தை மதிக்கும் சிறந்த ஒழுக்கப் பண்புகளைக் கொண்ட சமூகமொன்றை நாட்டில் கட்டியெழுப்புவதற்கு சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கோட்டே ரஜமகா விகாரையின் விகாராதிபதி வண. அளுத்நுவர அநுருத்த தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் பிற்பகல் கோட்டே ரஜமகா விகாரைக்கு விஜயம் செய்து, வண. அளுத்நுவர அநுருத்த தேரரைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டபோது ஆசியுரை வழங்கிய தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அச்சமும் சந்தேகமும் இன்றி நிம்மதியாக வாழக்கூடிய சூழல் நாட்டில் உருவாக வேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகுமெனவும் தேரர் சுட்டிக்காட்டினார்.

தாமதமின்றி செயலாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த தேரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு ஒட்டுமொத்த மகாசங்கத்தினரின் ஆசிர்வாதமும் கிடைக்கப் பெறுமெனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நாரஹேன்பிட்டிய அபயராம விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விகாராதிபதி வண.முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரரை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றார்.

வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மற்றும் ஐக்கிய அமெரிக்க குடியரசின் பிரதான சங்க நாயக்கர் வண.வல்பொல பியனந்த தேரர் ஆகியோர் இதன்போது ஆசியுரையாற்றியதுடன், வருகை தந்திருந்த மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

பந்துல குணவர்த்தன, சுசில் பிரேமஜெயந்த உள்ளிட்ட அமைச்சர்களும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# சஜித்தை எதிர்க்கட்சித் தலைவராக உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் சபாநாயகர் காலம்தாழ்த்துவது தவறு

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

பெரும்பான்மை மற்றும் ஏகமனதான முடிவிற்கமைய எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டுள்ளதை சபாநாயகர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனினும் சம்பிரதாயங்களைக் காரணம் காட்டி சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் காலம்தாழ்த்தினால் அது தவறான செயற்பாடு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விசனம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அதனால் தற்போது எவ்வித பயனும் கிடையாது என்றும், ஐ.தே.கவின் தலைமைத்துவத்தை பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் எழுந்துள்ள விமர்சனங்கள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார். (ஜ)

# ஐ.எஸ்.அமைப்புடன் தொடர்பு இருவருக்கு குற்றப்பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

ஏப்ரல் 21 தின பயங்கரவாதத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான மொஹமட் சஹ்ரானுடன் தொடர்புகளை பேணியமைக்காக இந்தியாவில் கைது செய்யப்பட்ட கோயம்புத்தூர் தலைவர் உள்ளிட்ட இருவருக்கு எதிராக அந்நாட்டு பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கோயம்புத்தூர் தலைவராக கருதப்படும் மொஹமட் அசாருதீன் மற்றும் அவரது உதவியாளர் ஷெயிக் ஹிதயதுல்லாஹ் என்ற சந்தேகநபர் இருவருக்கு எதிராக குற்றவியல் சதி மற்றும் பயங்கராத குற்றச்சாட்டின் பேரில் இவ்வாறு நீதிமன்றில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் குறித்து கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து கோவையில் முன்னெடுக்கப்பட்ட தேடுதலின் போது மொஹமட் அசாருதீன் கைது செய்யப்பட்டார்.

அசாரூதீன், போத்தனூரில் சதாம், அக்ரம் ஜிந்தா உள்ளிட்டோரது வீடுகளில் இந்திய தேசிய புலனாய்வு அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இதன்போது, மொஹமட் அசாரூதீன் என்ற சந்தேகநபர் பயங்கரவாதி சஹ்ரானுடன் சமூக வலைத்தளத்தின் ஊடாக தொடர்புகளை பேணி வந்தமை உறுதி செய்யப்பட்டதாக இந்தியாவின் தேசிய புலனாய்வு அதிகாரிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# நிர்வாகத்துறை தெரிந்தவர்களே நிர்வாகத்தைப் புரிந்து கொள்வர்

# கட்சி முகாம்களைக் கைவிட்டு மக்களுக்குச் சேவை செய்யுங்கள்

## யாழ்.மாநகரசபை முதல்வர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் நிர்வாகத்தை விமர்சிப்போர் கட்சி முகாம்களைக் கைவிட்டுவிட்டு மக்களுக்காக சேவையாற்ற முன்வருமாறு யாழ்.மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் சபை உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்.மாநகர சபை நிர்வாகச் செயற்பாடுகள் பற்றி சமூக வலைத்தளங்களில் விமர்சன விவாதம் நடத்துவோர் மக்களின் குறைகளைப் பற்றியோ நிர்வாகக் குறைகள் பற்றியோ சபையில் விவாதிக்க முன்வர வேண்டும்.

யாழ்.மாநகர சபையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற நிலை இல்லாத போதும் சில உறுப்பினர்கள் தம்மைக் கட்சி ரீதியாகப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்க வேண்டுமென்ற நிலையில் செயற்படுகிறார்கள்.

யாழ்.மாநகரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை முதல்வர் என்ற ரீதியில் நான் தயாரித்து சபைக்குச் சமர்ப்பித்த நிலையில் மக்கள் நலன் கருதி திருத்தங்களையோ அல்லது உட்சேர்க்கைகளையோ எந்தவொரு உறுப்பினரும் முன்மொழியவில்லை.

ஆனால்,குறித்த பட்ஜெட்டில் குறைகள் இருக்கிறது என ஒரு பகுதியினரும் கடந்த பட்ஜெட் விடயங்களை நிறைவேற்றவில்லை என இன்னொரு பகுதியினரும் ஒன்றுமே கூறாமல் வேறு ஒரு சிலரும் எதிர்த்தார்கள். பட்ஜெட்




வாக்கெடுப்பில் தோல்வி கண்டது. மாநகர சபையின் பதவிக் காலத்தில் எவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றி மக்களுக்கு சேவையாற்றலாம் என நினைக்காதவர்கள் முதல்வரையும் நிர்வாகத்தையும் நிர்வாகத்துறை தெரியாதவர்கள் எனக் கூறுவது அவர்களுக்கு நிர்வாகத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை என எண்ணத் தோன்றுகிறது.

பதவிகள் யாருக்கும் நிரந்தரமானதல்ல. பதவி வாய்ப்புக்கள் கிடைக்கும் போது அதை மக்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாறாக முதல்வரை ஆளும் கட்சி என நினைத்து எதிர்ப்பது நியாயமற்ற செயலாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# அரசியல்வாதிகள் பதவியில் இருக்கும் போது தன்னிச்சையாக செயற்படக்கூடாது- நிமால்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் பதவியில் இருக்கும்போது தன்னிச்சையாக செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பண்டாரவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள தேர்தல்களில் பொதுஜன பெரமுனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றாக இணைந்தே செயற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அரசியல்வாதிகள் மக்களின் நலனுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுவதுடன் பதவியில் இருக்கும்போது தன்னிச்சையாக செயற்படக் கூடாது எனவும் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார். (ஐ)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1911

கம்சாயினி




தர்மிதன்




கானவர்சினி




வேதன்யன்




தாருஷா




யாமினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தேவைக்கு ஏற்றவாறு “19” திருத்தப்படும்

## இராஜாங்க அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிய மைத்த காலத்தில் இருந்து அரச ஊழியர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல் குறித்து சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை ஸ்தாபிக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்துள்ளார் என்று தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு பாராளுமன்றத் தேர்தலின் ஊடாக கிடைக்கப் பெறும். மக்களுக்கும், அரச நிர்வாகக் கட்டமைப்பிற்கும் தேவையான விதத்தில் அரசியலமைப்பின் 19 வது திருத்தம் மாற்றியமைக்கப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

நல்லாட்சி அரசாங்கத்தில் மக்கள் மீதான சேவைக்கும், அபிவிருத்திக்கும் காட்டிய அக்கறையினை காட்டிலும் அரச ஊழியர்கள் மீது அரசியல் பழிவாங்கலுக்கு முக்கியத்துவம் காண்பிக்கப்பட்டது. இவ்வாறு பழிவாங்கப்பட்டவர்களுக்கு நீதிகிடைக்க வேண்டும் என்பதுடன் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் பின்வரும் விடயதானங்களை உள்ளடக்கிய அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டு உயர்பதவிகள் வழங்க மறுக்கப்பட்டமை, நீதிக் கட்டமைப்பில் அரசியல் செல்வாக்கு, அரசியல் பழிவாங்கலை இலக்காகக் கொண்டு நிறுவனங்கள் ஸ்தாபிப்பு உள்ளிட்ட பிரதான விடயங்களை அடிப்படையாகக்கொண்ட பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்திற்கு அமைய விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவினை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கலுக்குட்படுத்தப்பட்ட அரச ஊழியர் தொடர்பிலும், பொறுப்புக்களை தவறாக செயற்படுத்தியவர்கள் தொடர்பிலும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு பரிந்துரை செய்யவேண்டும். சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய ஆறு வார காலத்திற்குள் அமுலுக்கு வரும் வகையில் விசாரணை ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும் என்று பிரதமர் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையின் அனுமதி ஆட்சேபிக்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, நிதி குற்றப்புலனாய்வு பிரிவு (எப்.சி.ஐ.டி).உள்ளிட்ட சிறப்பு விசாரணை பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பில் ஆராயவேண்டும். ஆணைக்குழுவின் விசாரணைகளை அடிப்படை யாகக் கொண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் பழிவாங்கலுக்குட்படுத்தப்படும் அரச ஊழியர்களுக்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வகையிலும் இருப்பதற்கு பாதுகாப்பு வழிமுறைகள் மேற்கொள்வதற்கும் இந்த அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

**கேள்வி:-** இடைக்கால அரசாங்கத்திற்த பொதுத்தேர்தலில்பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமா?

**பதில்:-** நிச்சயம் கிடைக்கப் பெறும். பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் பலமான அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லப்படும்.

**கேள்வி:-** அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம், 13ஆவது திருத்தம் ஆகியவற்றை நீக்கும் முயற்சியினை அரசாங்கம் முன்னெடுப்பதாக குற்றம்சாட்டப்படுகின்றது உண்மையா ?

**பதில்:-** அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் பல்வேறு முரண்பாடான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. மக்களுக்கு பொருத்தமற்ற பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம்கூட ஜனாதிபதியிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது. ஆகவே மக்களின் தேவைகளுக்காகவும், சிறந்த அரச நிர்வாகத்திற்காகவும் இத்திருத்தம் மீள்பரிசீலனை செய்யப்படும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மாகாண சபை முறைமையினை ஏற்படுத்தும் விதமாக உருவாக்கப்பட்டது. மாகாண சபை முறைமையினை இல்லாதொழிப்பது சர்வதேச மட்டத்தில் தவறான ஒரு நிலைப்பாட்டை தோற்றுவிக்கும்.



**கேள்வி:-** முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை எதிர்க் கட்சி தலைவராக பரிந்துரைத்துள்ளமை இடைக்கால அரசாங்கத்திற்கு சவால் இல்லையா ?

**பதில்:-** எவ்விதத் தடையும் கிடையாது. ஐக்கிய தேசியக்கட்சியின் பலவீனமான அரசாங்கத்தை ஜனாதிபதி தேர்தலில் புறக்கணித்த மக்கள் நிச்சயம் அதன் உறுப்பினர்களையும் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் புறக்கணிப்பார்கள்.

**கேள்வி:-** சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தல் விவகார விசாரணைகள் தற்போது எந்நிலையில் காணப்படுகின்றன ?

**பதில்:-** கடத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் விவகாரம் தூதரக இராஜதந்திர மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அரசாங்கத்திற்கு அவப்பெயரினை ஏற்படுத்தும் விதமாகவே இந்த சூழ்ச்சி காணப்படுகின்றமையால் இவ்விடயத்தை பொறுமையாக கையாள வேண்டியுள்ளது என மேலும் தெரிவித்தார். (ஐ)

---

## மிரிஹான தடுப்பு முகாமிலிருந்து

# தப்பிச்சென்ற 9 பேரில் கைது செய்யப்பட்ட எட்டுப்பேர் நாட்டிலிருந்து வெளியேற்றம்

## குடிவரவு குடியகல்வு திணைக்களம் தகவல்

(கொழும்பு)

மிரிஹான தடுப்பு முகாமில் இருந்து தப்பிச்சென்ற 9 வெளிநாட்டவர்களில் 8 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டனர். அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றியதாக குடிவரவு குடிய கல்வு திணைக்களம் தெரிவித்தது.

மிரிஹான தடுப்பு முகாமில் இருந்த கைதிகளில் 9 பேர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளமை குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது தெரிய வந்தது. இது தொடர்பில் மிரிஹான பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது கண்டுபிடிக்கப்பட்டவர்களில் 8 பேர் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் அவர்கள் அனைவரும் நைஜீரிய பிரஜைகள் எனவும் திணைக்களத்தின் சட்டக் கட்டுப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான கயான் மிலிந்த தெரிவித்தார்.

மிரிஹான தடுப்பு முகாமில் கடன் அட்டை மோசடிகள் இடம் பெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து கடந்த வியாழக்கிழமை சுற்றிவளைப்பு நடவடிக்கை யொன்றைமேற் கொண்டனர். இந்தச் சோதனையின் போது 75 கையடக்க தொலைபேசிகள். 5 மடிக்கணனிகள் மற்றும் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் பணம் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

அதனையடுத்து குடிவரவு குடியகல்வு திணைக்கள அதி காரிகளால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போதே அந்த முகாமில் இருந்தவர்களில் 9 பேர் தப்பிச்சென்றுள்ளமை தெரியவந்தது. விசேட தேடுதல் நடவடிக்கைகளையடுத்து அவர்களில் 8 பேர் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அவர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.

அவர்களில் ஒருவர் வெள்ளிக் கிழமையே கைது செய்யப்பட்டதாகவும் அவருடன் சேர்த்து இப்போது 111 பேர் அந்த முகாமில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த கைதிகளில் அதிகளவில் நைஜீரிய பிரஜைகளே உள்ளனர். இலங்கைக்கு சுற்றுலா விசாவில் வந்த இவர்களில் பெரும்பாலானோர் நிர்மாணத்துறை நிறுவனங்களில் பணிபுரிந்துள்ளனர். தமது விசா காலம் முடிவடைந்த பின்னரும் சட்ட விரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த நிலையிலேயே, அவர்கள் கைது செய்யப்பட்டு மிரிஹானமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# லயன் குடியிருப்பில் தீ! வீடுகள் கடும் சேதம்



(தலவாக்கலை)

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டகொடை பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் வீடுகள் சேதமடைந்துள்ளன.

வட்டகொடை யோக்ஸ்போட் தோட்டம் மணிபூர் பிரிவில் 7 வீடுகள் கொண்ட 8ஆம் இலக்க தொடர் லயன் குடியிருப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. இதில், ஒரு வீடு தீயினால் முற்றாக எரிந்துள்ளதுடன் மற்று மொரு வீடு பகுதியளவில் சேத மாகியுள்ளது. இவ்விரு வீடுகளிலும் இருந்த 9 பேர் தற்காலிகமாக யோக்ஸ்போட் கலாசார மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் எனப் பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகன.

இதேவேளை, இது தொடர்பாக தலவாக்கலை பொலிஸ் நிலையத்திற்கு பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீப் பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)


---

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 320 | 350 | 240 | 220 | 400 |
| தக்காளி | 160 | 160 | 140 | 70 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 140 | 120 | 70 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 80 | 120 |
| கரட் | 200 | 280 | 220 | 220 | 300 |
| பூசணி | 70 | 50 | 50 | 40 | 80 |
| புடோல் | 120 | 100 | 80 | 50 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 400-450 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 130-160 | 110 | 140 |
| பாகற்காய் | 250 | 350 | 160 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 140 |
| பயற்றங்காய் | 300 | 150 | 180 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 280 | 300 | 300 |
| பீற்றூட் | 200 | 180 | 180 | 60 | 200 |
| கறிமிளகாய் | 250 | 280 | 220 | 220 | 200 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 200 | 180 | 160 | 90 | 160 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | — | 80 | 80 |
| கீரை – 1பிடி | 50 | 40 | 60 | 60 | 60 |
| தேசிக்காய் | 80 | 140 | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 30-50 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 300 | 250 | 210 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 250 | — | — | — |
| முள்ளங்கி | 100 | 140 | — | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 70 | 100 | — | 160 | 100 |




# வேலையில் முதல்நாள்



புதிதாக வேலையில் சேர்ந்த வாடிக்கையாளர் சேவை அதிகாரிகள் ஐந்து பேருக்கும் பயிற்சி முடிந்தது. பயிற்சியின் இறுதியில் அவர்களிடம் பேசிய பொது மேலாளர் கடைசியாகச் சொன்னார்.

"இந்த மூன்று நாட்களும் உங்கள் வேலையைப் பற்றி நன்கு அறிந்து கொண்டிருப்பீர்கள். நாளையிலிருந்து நீங்கள் அலுவலகத்தில் அமர்ந்து வாடிக்கையாளர்களுடன் நேரடியாகப் பேசி அவர்கள் குறைகளைக்கேட்டு, அவர்கள் தேவைகளை உணர்ந்து அவர்கள் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களைத் திருப்திப்படுத்தப் போகிறீர்கள். "ஆள் பாதி, ஆடை பாதி" என்பது பழமொழி. வேலைக்கு வரும்போது நீங்கள் அனைவரும் ரை கட்டிக்கொண்டு வர வேண்டும். யாருக்காவது ரை கட்டிக்கொள்ளத் தெரியாவிட்டால் சொல்லுங்கள். நான் கட்டி விடுகிறேன்"

மெல்லிய சிரிப்பு எழுந்தது.

அடுத்த நாள் அலுவலகத்துக்கு வந்த ஐவரில் பரந்தாமன் ஒருவன் மட்டும் ரை க்கட்டிக் கொண்டு வரவில்லை. அவன் உடைகளும் கசங்கியிருந்தன.

"என்னப்பா?" என்றார் கிளை மேலாளர்.

"சேர். ஸ்கூட்டரில் வந்த போது சின்ன விபத்து. ஸ்கூட்டரிலிருந்து கீழே விழுந்துட்டேன். ரை தரையில் பட்டுக் கறையாயிடுச்சு. பாண்ட் சட்டையெல்லாம் கூடக் கசங்கிடுச்சு. அழுக்குப் பட்ட இடங்களில் தண்ணி போட்டுத் துடைச்சுக்கிட்டு வந்திருக்கேன். என் வீடு ரொம்ப தூரம். திரும்பவும் வீட்டுக்குப் போய் வேற டிரஸ் போட்டுக்கிட்டு வரத்துக்கு ரொம்ப நேரம் ஆயிடும். இன்னிக்கு ஒரு நாளைக்கு அனுமதி கொடுத்தீங்கன்னா.."

"சரி. போய் வேலையைப் பாரு. சாயந்தரம் ஜி.எம்.வருவாரு. அவரு என்ன சொல்லப் போறாரோ!" என்றார் கிளை மேலாளர்.

மாலை பொது மேலாளர் வந்தபோது, ஐந்து புதிய அதிகாரிகளும் ஐந்து கவுண்ட்டர்களில் உட்கார்ந்து வாடிக்கையாளர்களின் தேவைகளை கவனித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"கிளை மேலாளரின் அறையில்போய் உட்கார்ந்ததும் "என்ன? எல்லாம் சரியா இருக்கா? புது ஆளுங்க எப்படி இருக்காங்க" என்றார் பொது மேலாளர்.

"பரவாயில்லை சேர்..." என்றார் கிளை மேலாளர், ஒருவர் மட்டும் ரை கட்டிக்கொள்ளாமல் வந்திருப்பதை இப்போது சொல்லலாமா, அப்புறம் சொல்லலாமா என்று யோசித்தபடி.

"ஏன் ஒரு கவுண்ட்டர்ல மட்டும் கியூ நீளமா இருக்கு?"

"தெரியல சார். காலையில வேலை ஆரம்பிச்சுக் கொஞ்ச நேரத்திலிருந்தே அப்படித்தான் இருக்கு. நான் அந்த க்யூவிலே இருந்தவங்ககிட்ட போயி வேற வரிசைக்குப் போங்கன்னு சொன்னேன். ஆனா அவங்க "பரவாயில்லைன்னு சொல்லிட்டு அங்கேயே நிக்கறாங்க. அதோட மத்த கியூவிலிருந்தும் ஒண்ணு ரெண்டு பேர் அந்த நீள கியூவுக்கு வராங்க."

"அந்த வரிசை இருக்கிற கவுண்ட்டர்ல இருக்கற எக்ஸிக்யூடிவ் யாரு?" "பரந்தாமன். சேர்! அவரு.." என்று ஆரம்பித்தார கிளை மேலாளர்.

"நானே பக்கத்தில போய்ப் பார்க்கிறேன்" என்று எழுந்த பொது மேலாளர் வெளியே போய் கவுண்ட்டர்களுக்கு அருகில் நின்று பார்த்தார். கிளை மேலாளரும் அவர் பின்னே போய் நின்று கொண்டார். கியூவில் நின்றவர்கள் அவர்களை மறைத்ததால் கவுண்ட்டருக்குப் பின்னால் அமர்ந்திருந்த அதிகாரிகளால் அவர்களைப் பார்க்க முடியவில்லை.

இரண்டு மூன்று நிமிடம் கழித்து, பொது மேலாளர் கிளை அதிகாரி பின் தொடர அறைக்குத் திரும்பினார்.

"சம்திங் ஆட், இல்லை சம்திங் ஃபன்னி, இல்லை சம்திங் இன்ட்டரஸ்டிங்!"

"சேர். அந்த கவுண்ட்டரில் உட்கார்ந்திருக்கிற பரந்தாமன் ரை கட்டிக்காததைத்தானே சொல்றீங்க?"

"அவனுக்கு எதுக்கு ரை?"

"என்ன சேர் சொல்றீங்க?"

"அந்தப் பரந்தாமனை கவனிச்சீங்களா? சிரிச்ச முகத்தோட, பணிவா, பொறுமையா, கோபப் படாம, மத்தவங்களைப் புண்படுத்தாத விதத்தில கஸ்டமர்கள் கிட்டப் பேசிக்கிட்டிருக்கான். அதை வெளியிலிருந்து பாத்துட்டு தான் அவனோட கவுண்ட்டர்ல நிறைய பேரு நிக்கறாங்க. "ஆள் பாதி ஆடை பாதி"ன்னு நேத்திக்கு நான்தான் ட்ரைனிங்கிலே சொன்னேன். ஆனா அவனோட பணிவும் பதமான பேச்சுமே ரையும் சூட்டும் கொடுக்க முடியாத ஒரு பர்சனாலிட்டியை அவனுக்குக் கொடுத்துடுச்சு" என்றார் பொது மேலாளர்.

**குறள் 95**

**பணிவுடையன் இன்சொலன்**
**ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற.**

**பொருள்:**

**பணிவுடையவனாகவும் இனிமையாகப் பேசுபவனாகவும் இருப்பதே ஒருவருக்குச் சிறந்த அணிகலன்கள் ஆகும். மற்ற அணிகலன்கள் தேவையில்லை.**

## அங்கே பாரு சின்ன செடி



அங்கே பாரு சின்ன செடி
அழகாய் ஆடி அசையுது
இலையை எல்லாம்
பறித்துவிட்டால்

அதற்கு கூட வலிக்குமாம்
அதனால் சின்ன பாப்பா
இலையை பறித்து போடாதே
அதனால் சின்ன பாப்பா
இலையை பறித்து போடாதே

## விடுகதைகளும் விடைகளும்

• நாளெல்லாம் நடந்தாலும் நாற்பதடி செல்லாது அந்த நாயகனுக்கோ உடல் மேல் கவசம் அது என்ன?

**நத்தை**

• நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன?

**தையல் ஊசியும் நூலும்**

• வீட்டுக்கு வந்த தொந்தியப்பன் தினமும் கரைகிறான். அவன் யார்?

**நாட்காட்டி**

• முறையின்றித் தொட்டால்,ஒட்டிக் கொண்டு உயிரை எடுப்பான் அவன் யார்?

**மின்சாரம்**

• வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை. அது என்ன?

**செருப்பு**

• மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல, பட்டை போட்டிருப்பான் சாமி அல்ல. அவன் யார்?

**அணில்**

• நீரிலும் வாழ்வேன், நிலத்திலும் வாழ்வேன். நீண்ட ஆயுள் உடைய எனக்கு இறைவன் கொடுத்த கவசமும் இருக்கு. நான் யார்?

**ஆமை**

• தாய் குப்பையிலே, மகள் சந்தையிலே அவை என்ன?

**நெல்**

• பூ பூக்கும். காய் காய்க்கும். ஆனால் பழம் பழக்காது. அது என்ன?

**தேங்காய்**

• கையை வெட்டுவார் கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர். யார் அவர்?

**தையல்காரர்**

• வயதான பலருக்கு புதிதாக ஒரு கை அது என்ன?

**வழுக்கை / பொக்கை**

## பழமொழிகள்

• கெரடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை என்பான்.

• பணக்காரன் பின்னும் பத்துப்பேர், பைத்தியக்காரன் பின்னும் பத்துப்பேர்.

• ஆரால் கேடு, வாயால் கேடு.

• பசியுள்ளவன் ருசி அறியான்.

• வளவனாயினும் அளவறிந் தளித்துண்.

• தானாகக் கனியாதது, தடிகொண்டு அடித்தால் கனியுமா?

• இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.

• பட்டும் பட்டாடையும் பெட்டியிலிருக்கும், காற்காசு கந்தையில் ஓடி உலாவும்.

• குனியக் குனியக் குட்டுவான், குனிந்தவன் நிமிர்ந்தால் குட்டினவன் ஓடுவான்.

முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன்.
– நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## தமிழ்நாட்டுச் சகோதரர்களுடன் இணைப்பை ஏற்படுத்த வேண்டும்

அண்டை நாடான இந்தியாவின் பக்கத் துணையின்றி இலங்கைத் தமிழ் மக்கள் விமோசனம் பெற முடியாதென்பது வெளிப் படையான உண்மை.

இந்த உண்மையை தமிழ் மக்கள் ஒரு போதும் மறந்தவர்கள் அல்ல.

இலங்கையில் தமிழ் மக்களை சிங்களப் பேரினவாதிகள் துவம்சம் செய்த போதெல் லாம் இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்ற ஒரே நம்பிக்கை மட்டுமே ஈழத்தமிழர்களிடம் இருந்தது.

அதேபோன்று இந்தியாவும் ஈழத் தமிழர் களுக்காகக் குரல் கொடுத்து வந்தது.

இவ்வாறானதொரு நெருக்கமான உறவுக் குத் தமிழகத்துச் சகோதரர்களும் இந்து சமயத்தின் ஞானபூமியாக இந்தியா இருப்பதும் காரணமாயிற்று.

இவைதவிர இலங்கை – இந்திய உறவு என்பது ஈழத் தமிழர்களினூடாக ஏற்பட்ட உறவு என்பதும் இங்கு நோக்குதற்குரியது.

எனவே இந்திய தேசத்தினதும் ஈழத் தமிழர் களதும் உறவு ஒருபோதும் பிரிக்க முடியாதவை.

இவை ஒருபுறமிருக்க, இந்தியாவுடனான உறவை ஈழத் தமிழர்கள் வலிமைப்படுத்துவது மிகவும் அவசியமானது.

இந்தியாவுடனான உறவை வலுப்படுத்து வதற்கான ஒரே வழி எங்கள் தமிழகத்துச் சகோதரர்களுடன் நெருக்கமான உறவைத் தொடர்ந்தும் பேணிக்கொள்வதாகும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைசார் விட யத்திலும் நலன்சார் விடயங்களிலும் எங்கள் தொப்புள்கொடி உறவான தமிழகத்து மக்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்

இவ்வாறாக எங்கள் தமிழகத்துச் சகோதரர் களின் கருசனை என்பது அரசியல் கட்சிகள் என்ற எல்லை கடந்து பல பரிமாணங்களில் பரந்து விரிந்துள்ளது.

அதிலும் குறிப்பாக அண்மையில் யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்குத் தமிழகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நீதியரசர்கள் அமைப்பு தனது ஆதரவைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தது.

இதுதவிர சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஆதரவைத் தெரிவித் திருந்தனர். இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

இதுபோல தமிழகத்திலுள்ள அநேக அமைப் புகள் எங்கள் மீது மிகுந்த கருசனை கொண் டுள்ளன.

எனவே மேற்குறிப்பிட்ட அமைப்புகளுடன் நாம் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதன் மூலம் மத்திய அரசின் கருசனைக்கு ஆளாக முடியும்.

ஆதலால் இதுவிடயத்தில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக் னேஸ்வரன் போன்ற தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழகத்துப் புத்திஜீவிகளுடன் –இராஜ தந்திரிகளுடன் இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் எங்களுக்கான புதிய வியூகங்களை அமைக்க முடியும்.

### பாராளுமன்ற தேர்தலில் மக்கள் என்னை ஆதரித்தால்

# 13 இன் பலன்கள் முழுவதையும் தமிழ் மக்கள் அனுபவிக்கச் செய்வேன்

### அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளும ன்றத் தேர்தலில் எனது பலத்தை தமிழ் மக்கள் அதிகரிப்பார்கள் ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பலன்கள் முழுவதையும் தமிழ் மக்கள் அனுபவிக்க வழி செய்வேன் என கடற் தொழில் நீரியல் வள அபி விருத்தி அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யின் செயலாளர் நாயகமு மான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரி வித்த 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஊட கவியலாளர்களால் நேற் றைய தினம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எனது ஆத ரவை வழங்கியிருந்தேன்.

மக்களிடம் கோட்டாபய ராஜபக்ஷவை நம்புங்கள் அவருக்கு வாக்குப் போடு ங்கள் என நான் எச் சந்தர்ப் பத்திலும் மக்களிடம் வாக் குக் கோரவில்லை.

என்னை நம்புங்கள் கோட்டாபயவுக்கு வாக்களி யுங்கள் என மக்களிடம் கோரிக்கை விடுத்திருந் தேன்.

ஆனால் கணிசமான அளவு மக்கள்தான் என் மீது நம்பிக்கை வைத்தார் கள்.பல மடங்கினர் என்னை நம்பாமல் கோட்டாபயவை நம்பி சஜித்துக்கு வாக்களி த்து விட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய தனது யாழ் தேர்தல் பிர சாரத்தில் 13 ஆவது திரு த்தம் தொடர்பில் தெளிவான கருத்தை முன்வைத்து மக் கள் முன் உரையாற்றி னார்.

பின்னர் 13 ஆவது திரு த்தம் தொடர்பில் சிங்கள மக்களின் விருப்பங்களை அறிந்தே செயற்படுத்த முடி யும் என்றாரே தவிர 13 ஆவது திருத்தத்தை ஒரு போதும் செயற்படுத்தமா ட்டேன் என்று கூற வில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் அதிகப்படியான சிங்கள மக்களின் வாக்குப்பலத்தில் வென்ற ஜனாதிபதி சிங்கள பெரும்பான்மை மக்களின் விருப்பங்களை மீறிச் செயற்பட முடியாதென சொல்வது நியாயமானது.

ஜனாதிபதி கோட்டாபய வைத் தோற்கடிப்பதற்காக சில அரசியல்வாதிகளாலும் ஊடகங்களாலும் ஆதார மற்ற முறையில் பரிமாறப் பட்ட கருத்துக்கள சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவு அலையை தோற்றுவித் தது.

ஆகவேதான் தமிழ் மக் களின் எதிர்காலம் தொட ர்பில் நம்பிக்கையுடன் பய ணிக்க நான் தயாராக உள்ள நிலையில் மக்கள் என் மீது நம்பிக்கையுடன் பயணித்தால் 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக் களுக்கு வரப் பிரசாதமா க்குவேன் என அமைச்சர் டக்ளஸ் மேலும் தெரிவித் தார். (ஞா-10)

### இரணைமடுவைப் பார்வையிடச் சென்ற

## மூவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - இரணை மடு குளத்தின் வான் கத வுகள் திறக்கப்பட்டதை பார் வையிட வந்த மூன்று மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், மூன்று பேர் படுகாயம டைந்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை 7 மணி யளவில் இரணைமடு குளத்திற்கு செல்லும் வீதி யில் இந்த விபத்து ஏற் பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடை ந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ள நிலை யில், படுகாயமடைந்தவர் களின் நிலை கவலைக் கிடமாக உள்ளதாக கிளி நொச்சி வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன.

கிளிநொச்சி இரணை மடு குளத்தின் 14 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், இரணைமடு குளத்தை பார்வையிட பெருமளவு மக்கள் வருகை தருகின்றனர். (ஞா)

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்**

16
2019

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
துடிப்பு மிக்க பெண் சமுதாயம் சிதைக்கப்பட இடமளிக்கக்கூடாது.

JSAC

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வாழ்க்கையில் பிரச்சினைகளை யாராலும் தவிர்க்க முடியாது. அவற்றைச் சவாலாக ஏற்று சமாளித்து, வாழ்க்கையைத் திறம்பட நடத்துவதைத்தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

-மாதா அமிர்தானந்தமயி

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# இறைத்தன்மை அடைய



இயற்கைத் தத்துவத்தையும், அதன் விளைவுகளையும் அன்றாடம் வாழ்வில் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இயற்கையின் விளைவுகளுக்குத் தொடர்ந்து ஆளாகிக் கொண்டும், சில நேரங்களில் பயன்படுத்திக் கொண்டும் வருகின்றோம். இதனைச் செயல் விளைவுத் தத்துவம் என்று சொல்லலாம். விதி என்றும் சொல்லலாம். தெய்வச் செயல் என்றும் சொல்லலாம். வினை அல்லது வினைப் பயன் என்றும் இதை மதிக்கலாம்.

இயற்கையை எவ்வளவுக்கெவ்வளவு நாம் அறிந்து கொள்கிறோமோ, அவ்வளவுக்குத் தான் நம் மனம் விரிவும், திண்மையும் பெறும். மனதின் திண்மைக்கு ஏற்பவே செயல் திறம் அமையும். செயல் திறமைக்கு ஏற்ப வாழ்க்கையானது வெற்றியும், மகிழ்ச்சியும் நிரம்பியதாக விளங்கும்.

மனிதனின் துன்பமெல்லாம், அவனுடைய குறையெல்லாம் இயற்கையை அறியாமலும் அல்லது அறிந்தும் அதனை மதியாமலும் அவன் நடந்து கொள்வதாலேயே தோன்றுகின்றன. இந்நிலையைத்தான். ஆணவம் என்பார்கள். நாம் இதனைத் "தன்முனைப்பு" (Ego) என்கிறோம்.

உலக உயிர்கள் அனைத்திலும் மனிதன் மிகவும் உயர்ந்தவன் இயற்கையின் பரிணாமச் சிறப்புகள் அனைத்தும் அவனிடம் ஒருங்கிணைந்துள்ளன. மனிதனிடம் இவ்வளவு பேராற்றல் இருந்தும் அவன் தன் ஆற்றலின் பெருமையை, தன் ஆற்றலின் முழுமையை மறந்திருக்கிறான். அதனால் அப்பேராற்றல் அவனிடம் இயக்கம் பெறாமல் பலங்குன்றியிருக்கின்றது. இதைமூடநிலை எனலாம். மூடம் என்றால் மறைவு என்று பொருள். மூடன் என்றால் அறிவு இருந்தும் அது அவனிடம் இயக்கம் பெறாமல் இருப்பவன். அறிவு இருப்பது வெளிப்படாமல் அதாவது மறைவாக இருக்கும் நிலையில் உள்ளது. இயக்கம் பெறாமல் தடைபட்டிருக்கும் நிலையாகும்.

தன்முனைப்பின் காரணமாக மனிதனானவன் தன் பேரறிவைதத் தன் உடல் அளவில் குறுக்கிக் கொண்டு, பொருள் அனுபோகத்திலும் புலன் அனுபோகத்திலும் மட்டுமே கவனம் கொள்ளச் செய்கிறது. அப்போது அவனது பேரறிவானது வெறும் பொருள் வழி மற்றும் புலன்வழி குறுகித் தன் உயர்வையும், சிறப்பையும் இழந்துவிடுகிறது.

## ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ண தொடரில் கே.சி.சி.சி. அணி முதலாமிடம்







ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 10 ஆண்டுகளாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (தரவரிசை பட்டியல்) 2019 ஆம் ஆண்டிற்கான கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ண தொடரில் நடைபெற்ற 26 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் கே.சி.சி.சி. அணி 05 போட்டிகளில் பங்குபற்றி 5 இலும் வெற்றிபெற்று 30.13 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்திலும் ரி.சி.சி.அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றியும் 2 போட்டிகளில் தோல்வியும் அடைந்து 27.53 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் பற்றீசியன்ஸ் அணி 03 போட்டிகளில் பங்குபற்றி 02 போட்டியில் வெற்றியும் 01 போட்டியில் தோல்வியும் அடைந்து 15.83 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலுமுள்ளனர்.

ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு,

அரியாலை சென்றல் 10.38, ஸ்கந்தாஸ்ரார் 9.31, கிறாஸ்கொப்பர்ஸ் 8.72, சென்றலைட்ஸ் 8.42, ஓல்ட்கோல்ஸ் 8.36, மானிப்பாய் பரீஸ் 8.15, டிறைற்றோன் 7.54, AB 7.50, நியூஸ்ரார் 7.27, ஜொலிஸ்ரார் 7.16, ஸ்ரான்லி 5.70, யாழ்.பல்கலைக் கழகம் 3.00, றெயின்போ 2.66, டிறிபேக்ஸ்ரார் 2.59, யாழ். சென்றல் 2.54, YMHA 2.46, யூனியன்ஸ் 2.34, விங்ஸ் 2.31, விக்டோறி 1.85, சிறிகாமாட்சி 1.37, யாழ்.ஜொனியன்ஸ் 0.00, புள்ளிகளை பெற்றுக்கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் 2010 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழக அணி 13 போட்டிகளில் பங்குபற்றி 11 போட்டிகளில் வெற்றி பெற்று 44 புள்ளிகளை பெற்று 1 இடத்திலும், ஜொலிஸ் ரார் அணி 16 போட்டிகளில் பங்குபற்றி 12 போட்டிகளில் வெற்றி பெற்று 37 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும், யாழ்.சென்றல் அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 08 போட்டிகளில் வெற்றிபெற்று 28 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டப்போட்டி

இலங்கை பாடசாலை கூடைப் பந்தாட்டச்சங்கம் நடத்தும் வட மாகாண ரீதியிலான 15 வயதுப் பிரிவினருக்கு இடையில் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் மானிப்பாய் ஏஞ்சல் இன்டர்நஷனல் பாடசாலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளன.


முதலில் அரையிறுதி ஆட்டத்தில் ஏஞ்சல் இன்டர்நஷனல் பாடசாலை அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளதுடன் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் டிறிபேர்க் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

மூன்றாவது வெற்றியைத் தீர்மானிக்கும் போட்டியும் அன்றையதினம் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)



இலங்கை பாடசாலை கூடைபந்தாட்ட சங்கம் நடாத்தும் கூடைபந்தாட்ட போட்டியில் யாழ் மத்திய கல்லூரி அணியை 20:16 என்ற அடிப்படையில் டிறிபேர்க் கல்லூரி அணி வெற்றி பெற்றது. யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை 42:20 என்ற புள்ளி அடிப்படையில் டிறிபேர்க் கல்லூரி அணி வெற்றி பெற்று அரை இறுதிக்கு தெரிவாகி உள்ளது. (க)

## அஸ்வினின் சாதனையை சமன் செய்தார் சகால்



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வெஸ்ட் இண்டீஸ் அணி மூன்று 20 ஓவர் போட்டி மற்றும் 3 ஒருநாள் ஆட்டத்தில் விளையாடுகிறது. இதில் முதல் டி20 போட்டி ஐதராபாத் நகரில் நேற்று நடைபெற்றது.

முதலில் பட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 207 ரன்கள் குவித்தது. இதையடுத்து கடினமான இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி வீரர்கள் வெஸ்ட் இண்டீஸ் அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர்.

இறுதியில் கப்டன் விராட் கோலியின் 94 ரன்களுடன் 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியில், இந்திய சுழற்பந்து வீச்சாளர் யுஷ்வேந்திர சகால் 4 ஓவர்கள் வீசி 36 ரன்கள் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகள் கைப்பற்றினார். இதன்மூலம் சர்வதேச போட்டிகளில் குறுகிய காலத்தில் அதிவேக விக்கெட் வீழ்த்திய இந்திய வீரர்களில் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வினின் சாதனையை அவர் சமன் செய்தார்.

முன்னதாக இந்திய வீரர்களில், ரவிச்சந்திரன் அஸ்வின் 46 போட்டிகளில் 52 விக்கெட்டுகள் எடுத்ததே குறுகிய காலத்தில் அதிவேகமாக வீழ்த்திய விக்கெட்டுகள் சாதனையாக இருந்தது.

ஆனால், நேற்று தனது 35ஆவது போட்டியில் விளையாடிய யுஸ்வேந்திர சகால் 2வது விக்கெட் வீழ்த்திய போது 52 விக்கெட்டுகள் வீழ்த்திய அஸ்வினின் சாதனையை சமன் செய்தார். (க)

## அடுத்த வருடம்...

தொரு முடிவைக் கொண்டு வரும் என எதிர்பார்ப்பதாகவும் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம்இரவு சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஜெனிவா விவகாரத்தில் நாம் ஏற்கனவே சில முன்னெடுப்புக் களைக் கையாண்டுள்ளோம்.

இதில் இலங்கை தொடர்பான விவகாரத்தில் எமக்கு அனு சரணையாக இருக்கின்ற நாடு களின் கூட்டமொன்று உள்ளது. இந்தக் குழுவுக்கு இப்போது தலைமை தாங்குவது பிரிட்டன். ஆகவே, அவர்கள்தான் இப்போது இதற்கொரு வடிவம் கொடுக்க வேண்டும்.

அந்தவகையில் பிரிட்டன் தூது வரை அண்மையில் சந்தித்து இந்த விடயம் குறித்து ஒன்றரை மணித்தியாலத்துக்கும் அதிகமாகப் பேசினேன். வருகின்ற சில நாட் களில் மேலும் சிலருடன் பேச்சுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஆகவே, எழுந்துள்ள புதிய சூழ்நிலை சம்பந்தமாக பிரேர ணையை நிறைவேற்றிய நாடுகளு டன் நாம் இப்போதே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம். இது மார்ச் மாதத்தில் நல்லதொரு முடிவைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கின் றோம்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னைய அரசு தீர்மானங் களை எதிர்க்கவில்லை. சில ஆரோக்கியமான நகர்வுகளை அவர்கள் முன்னெடுத்தனர்.

பொறுப்புக் கூறல் விடயத்தைத் தவிர்த்துச் செயற்பட முடியாது. பொறுப்புக்கூறல் என்பது எல்லா அரசுகளுக்கும் இருக்கின்ற பொறுப் பாகும். அதனைத் தட்டிக் கழிக் கவே முடியாது.

இந்தப் புதிய அரசு வடக்கு மற்றும் கிழக்கில் எமது மக்களை அடையாளப்படுத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செய்தால் அதனை நாம் ஆதரிப்போம்.

அதற்காகப் பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் நாம் கண்ணை மூடிச் செயற்படுவ தாக அர்த்தமில்லை.

இந்த விடயத்தில் எமது எதிர்ப்பை யும் அழுத்தங்களையும் முழுமை யாக நாம் பிரயோகிப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## இன்றும் நாளை...

றும் அனுராதபுரம் மாவட்டங் களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின் றது.

நாட்டின் ஏனைய பிரதேசங் களில் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்ற தென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## அமைச்சர்களா...

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, மின்சார சபை, இலங்கை முதலீட்டுச்சபை, இலங்கை விமான நிறுவனம் ஆகிய சில அரச நிறுவனங்களுக்கு தலை வர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியானதை அடுத்து சம்பந்தப் பட்ட அமைச்சர்களை தொலை பேசியில் தொடர்புக்கொண்டுள்ள ஜனாதிபதி, நிபுணத்துவ குழுவின் தீர்மானத்தை மீறி செயற்பட வேண்டாம் என அறிவித்துள் ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மக் களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அரச நிறுவனங்களை முன்னேற்ற தகுதியான நபர்களை தெரிவு செய்ய விளம்பரம் வெளியிட் டுள்ளதாகவும் அவ்வாறு தெரிவு செய்யப்படும் நபர்களில் தகுதியான வர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதி பதி, சம்பந்தப்பட்ட அமைச்சர்களி டம் கூறியுள்ளார்.

அத்துடன் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்தி ருக்கும் எவரையும் அரச நிறுவனங் களின் பதவிக்கு பரிந்துரைக்க வேண்டாம் என கூறியுள்ள ஜனாதி பதி, அப்படியான நபர்களை நிய மிக்கும் போது அவர்கள் நிறுவனத் தின் முன்னேற்றத்தை விட தேர் தலை இலக்காக கொண்டு செயற் படுவார்கள் எனவும் சுட்டிக்காட்டி யுள்ளார். (ம-3)

## தமிழர்களின்...

குற்றம் சாட்டியுள்ளது.

இந்த விடயம் குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள மாவை சேனாதிராஜா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் இனப்பிரச்சினை கூட குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவித்தார்.

மேலும் நல்லிணக்கம் குறித்து பேசிய மாவை சேனாதிராஜா, நல்லிணக்கம் என்பது அரசாங் கத்தை மட்டுமே சார்ந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டினார். ஆனால் இதுவரை, இந்த விடயத்தில் அர சாங்கம் எந்தக் கொள்கையையும் குறிப்பிடவில்லை என்றும் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அத்தோடு இந்த விவகாரங்கள் தொடர்பாக முந்தைய அரசாங் கத்துடன் நடத்தப்பட்ட கலந்துரை யாடல்களை எடுத்துரைத்த சேனாதி ராஜா, தமிழர்களின் பிரச்சினை களை புதிய அரசியலமைப்பு மூலம் மட்டுமே தீர்க்க முடியும் என வலி யுறுத்திய அவர், புதிய அரசாங்கம் தயாராக இருந்தால் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேசத் தயாராகவே உள்ளது என் றார். (ஞா)

## அரச ஊழியர்களின் சம்பளம்...

பட்டுள்ள பரிந்துரைக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள தாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

புதிய சம்பள திருத்தத்திற் கமைய 2015 ஆம் ஆண்டு 11,730 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெற்ற அரச சாதாரணதர சேவையாளர் களின் அடைப்படைச் சம்பளம் 2020 ஆம் ஆண்டு முதல் 24,250 ரூபாவாக உயர்வடையவுள்ளது. எனினும் சம்பளத் தீர்விற்கான ஆணைக்குழுவின் பரிந்துரைக் கமைய மேலும் மூவாயிரம் ரூபா அதிகரிப்புடன் அடிப்படைச் சம் பளம் 27,250 ரூபாவாக அதிகரிக் கப்படவுள்ளது. (ஞா)

## போதையில் அட்டகாசம் செய்த...

மாலை வேளையில் போத்தல் குத்திற்கு இலக்கான இளைஞன் ஒருவரை மற்றொரு இளைஞன் முச்சக்கரவண்டியில் ஏற்றி சாவ கச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அழைத்து வந்துள்ளார்.

இதன் போது காயமடைந்தவர் குறித்த விபரங்களை அழைத்து வந்தவரிடம் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் வினவிய போது இருவரும் வைத்தியசாலை யின் யன்னல் கண்ணாடிகள், பூச்சாடி கள், வாங்குகளை அடித்து நொறுக்கி அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை தட்டிக்கேட்ட பாது காப்பு உத்தியோகத்தரையும் தாக்கி விட்டு இரத்தம் ஒழுக ஒழுக இருவரும் தப்பித்துச் சென்றுள்ள னர். பின்னர் சாவகச்சேரி பொலி ஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு பொலிஸாரும், இளைஞர்களும் இணைந்து தேடுதல் நடத்திய போது சங்கத்தானைப் பகுதியில் இருவரும் அகப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டு கை விலங்குடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அழைத்து வந்த போது காயமடைந்த நபர் பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பி கை விலங்குடன் ஓட்டம் பிடித்துள்ளார். மீண்டும் விரைந்து செயற்பட்ட பொலிஸார் பத்து நிமிடங்களில் மீண்டும் அவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள னர். (ஞா-30)

## இராஜாங்க அமைச்சின் செயலாள...

கிளிநொச்சி மாவட்டச் செய லாளர் சுந்தரம் அருமைநாயகம், முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜனாதி பதியால் நியமிக்கப்படவுள்ளார்.

அதனால் அவர் ஜனாதிபதி செயலகத்தால் கிளிநொச்சியிலி ருந்து கொழும்புக்கு அழைக்கப்பட் டுள்ளார்.

இதற்கான அறிவிப்பு ஜனாதி பதி செயலகத்தால் நேற்று அறி விக்கப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு இரா ஜாங்க அமைச்சராக ஹெகலிய ரம்புக்வெல உள்ளார். அவரின் இராஜாங்கச் செயலராக சுந்தரம் அருமைநாயகம் நியமிக்கப்பட வுள்ளார்.

மூத்த தமிழ் நிர்வாக அதிகாரி யான சுந்தரம் அருமைநாயகம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற் றும் கிளிநொச்சி மாவட்ட செயலா ளராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

## குடும்பஸ்தர்...

சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலை யில் நேற்றையதினம் ஞாயிற்றுக் கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் படுகாயமடைந்த வாகன சாரதி இன்னும் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரின் மரண விசா ரணையை யாழ்.போதனா வைத் தியசாலையின் திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். (ஞா)

## தென்னை சரிந்து...

யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தை சேர்ந்த ஒரு வயதும் 2 மாதங்களும் நிரம்பிய நிரோஜன் கஸ்னிகா என்ற பால கியே மேற்படி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், நேற்றுக் காலை குழந்தையை அவரின் அம்மம்மா வீட்டின் முற்றத்தில் குளிப்பாட்டிக்கொண்டு இருந் துள்ளார். அப்போது அருகில் இருந்த தென்னைமரம் அடியோடு சரிந்து குழந்தையின் மீது விழுந்துள்ளது.

இதனையடுத்து பெற்றோர் குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் குழந்தை உயிரிழந்துவிட்டதாக வைத்தியர் கள் தெரிவித்தனர்.

குழந்தையின் அம்மம்மா படு காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். சம்பவம்தொடர்பான விசாரணை களை அக்கராயன் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (ஞா-100,350)

## யாழ்.பல்கலைக்குள் அதிரடிப்படை...

பார்த்ததுடன், அவர்களை உள்ளேவிட்டு பிரதான வாயிலை யும் மூட மறுத்தனர் எனத் தெரி வித்து மாணவர்கள் குழப்ப மடைந்துள்ளனர். இதனால் பல் கலைக்கழக வாயிலில் பதற்ற நிலை காணப்பட்டது. எனினும் சிறிது நேரத்தில் மாணவர்கள் அங்கிருந்து சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றது. சிறப்பு அதிரடிப்படையினர் 12 பேர் 6 மோட்டார் சைக்கிள்களிலும் பொலிஸார் இருவர் ஒரு மோட்டார் சைக்கிளிலும் வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவரை சிறப்பு அதிரடிப்படையினரும் பொலிஸாரும் துரத்தி வந்தனர். இளைஞர்கள் இருவரும் பல்கலைக்கழக வளா கத்துக்குள் நுழைந்ததால் சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸா ரும் ஆயுதங்களுடன் அவர்களை வளாகத்துக்குள் துரத்திச் சென்ற னர்.

எனினும் துரத்தி வந்த இளை ஞர்களைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்பட சிறப்பு அதிரடிப்படையினர் அங்கு கலை நிகழ்வுகளுக்காக நின்றிருந்த மாணவர்களை மிரட்டியுள்ளனர். இதனால் அத்து மீறி பல்கலைக்கழகத்துக்குள் ஆயுதங்களுடன் சிறப்பு அதிரடிப்படை யினர் நுழைந்தனர் எனவும் அவர்கள் வெளியேறாத வகையில் பிரதான வாயிலை மூடுமாறும் மாணவர்கள் நிர்வாகத்திடம் வலியுறுத்தினர்.

எனினும் பிரதான வாயில் மூடப்படாத நிலையில் சிறப்பு அதிர டிப் படையினரும் பொலிஸாரும் அங்கிருந்து வெளியேறினர்.

இதனால் தம்மை அச்சுறுத்திய சிறப்பு அதிரடிப் படையினரை வெளியேற அனுமதித்ததாகவும் அத்துமீறி நுழைந்த சிறப்பு அதிர டிப் படையினர் அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் நிர்வாகம் நட வடிக்கை எடுக்க வலியுறுத்தி பெருமளவு மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் பிரதான வாயிலில் கூடி னர்.

இதேவேளை, தாம் துரத்தி வந்த சந்தேகநபர்கள் இருவரும் பல்கலைக் கழக மாணவர்கள் என்று தெரி விக்கும் பொலிஸார், அவர்களை தவறான முறையில் வாகனம் செலுத்தி வந்ததால் துரத்திச் சென்ற தாகவும் தெரிவித்தனர். (ஞா)


அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 815
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.12.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 71,582,960/-
வெற்றி இலக்கங்கள் 17 35 60 69 Y
அபிவிருத்தி லொத்தர் சபை
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1088
சீட்டிழுப்பு திகதி 08.12.2019 ஞாயிற்றுக்கிழமை
I 13 27 51 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.85,624,308
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08/12/2019 வெற்றி வாரம் 2701 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் மேஷம் 01 03 25 39
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,393,570
2019/12/09 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 08-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2324
வெற்றி இலக்கங்கள் N 40 42 66 71

மஹஜன சம்பத
திகதி 2019/12/08
சீட்டிழுப்பு இலக்கம் 4065
G 8 2 4 9 1 0

தன நிதானய
திகதி - 2019/12/08
சீட்டிழுப்பு இலக்கம் - 236
X 09 48 59 63

நீரோகா
திகதி 2019/12/08
சீட்டிழுப்பு இலக்கம் 633
வெற்றி இலக்கங்கள் சிம்மம் 09 20 43 57

## Personal Class
**கணினி, சிங்களம்**
அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
18 வருட அனுபவம்
சான்றிதழ்கள் வழங்கப்படும்.
(C-8461) TP:0779672038

## விரைவு பொதிகள் சேவை
**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு ட்பட்டது)
(C-8115)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
0768226240
V2 TRAVELS

## இறைச்சிக் கோழி விற்பனை
உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது **1Kg - 430** மட்டும்
கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு
**U.S.A பாம்** (1427)
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை. தொ.பே: 0778689500

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
## றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (1419)

## தமிழ் வகுப்புக்கள்
தரம் 6 - 11
**திரு. க.மு.நித்தி**
கே.கே.எஸ்.வீதி, தாவடிச்சந்தி.
077 105 1015 (8468)

CTHI
02 வாரத்தில் பயணம்
சிங்கப்பூரில் கல்வி
அவுஸ்திரேலியாவில் பயிற்சி (C-8301)
0760579999

## சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை



| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
**076 443 1576**
**அருள்**
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8397)

## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பழுது பார்த்தல்
குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம் (refrigerator, washing Machine) என்பன திருத்திக் கொடுக்கப்படும். (1423)
தொடர்புகளுக்கு: 0760092064

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (1379)


021 222 8093 புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536 (C-8460)
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


# 60வது பிறந்தநாள் நினைவுகள்



## அமரர் அமிர்தலிங்கம் செல்வக்குமாரன் (கிச்சி)
(தொண்டைமானாறு)
(முன்னாள் ஆங்கில ஆசிரியர், மன்/நறுவிலிக்குளம் றோ.க.த.க பாடசாலை, மன்னார்)

**அன்னை மடியில்: 09.12.1959 ஆண்டவன் அணைப்பில்: 22.12.1984**

அன்னை தந்தை சகோதரர்கள் உற்றார் உறவினர் நண்பர்கள் மாணவர், ஆசிரியர் அனைவரையும் என்றுமே மகிழ்வித்த எம் ஆருயிரே! நீ விண்ணுலகெய்தினும் அன்றுபோல் இன்றும் எம்முடன் இருக்கிறாய்.

உன் நீங்கா நினைவுகளுடன்
திருமதி அருந்தா கதிரமலை, வி.எம்.றோட், பருத்தித்துறை, இராஜசிங்கம் (ஸ்பெயின்), திருமதி யோகராணி திருத்தனியநாதன் (கனடா), திருமதி அமிர்தயோகம் நித்தியானந்தம் (பிரான்ஸ்), சிவரூபன் (பிரான்ஸ்), கமலக்கண்ணன் (அவுஸ்திரேலியா), கலாநிதி இராசகுமாரன், தொண்டைமானாறு அமிர்தலிங்கம் (ஜப்பான் சின்னத்துரை), யோகம்மா குடும்பத்தினர் (1422)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.